04TH
APRIL
2026

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 103 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com

## உதயம் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக யாஸீர் லாஹிர் நியமனம்!



வாராந்தம் மின்னிதழாக வெளிவந்து கொண்டிருக்கும்

02ம் பக்கம்பார்க்க...

# டிரம்பின் போர்நிறுத்த முன்மொழிவை அதிரடியாக நிராகரித்த ஈரான்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் முன்வைத்த 48 மணிநேர போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஈரானிய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இஸ்லாமாபாத் ஊடாக முன்வைக்கப்பட்ட இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தமது தாக்குதல் தொடருமென்றும் ஈரான் திட்டவட்டமாக தமது முடிவை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து வெளியாகியுள்ள மற்றொரு தகவலின்படி, அமெரிக்கா முன்வைத்த 48 மணி நேர போர்நிறுத்த முன்மொழிவை ஈரான் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெயர் குறிப்பிடப்படாத மற்றொரு நாட்டின் மூலம் புதன்கிழமை அன்று இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டதாக அந்த ஆதாரம் குறிப்பிட்டுள்ளது.

ஏப்ரல் 2ஆம் திகதி, அமெரிக்கா நட்பு நாடுகளில் ஒன்றின் மூலம் 48 மணி நேர போர்நிறுத்தத்தை முன்மொழிந்தது, என அந்த அறிக்கையில் ஒரு தகவல் ஆதாரம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

அந்த முன்மொழிவு, பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பதற்ற நிலை மற்றும் அமெரிக்க படைகள் எதிர்கொள்ளும் சவால்கள் காரணமாக முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஈரான் எழுத்து மூலம் பதில் அளிக்கவில்லை அதற்கு பதிலாக, நிலத்தில் கடுமையான தாக்குதல்களைத் தொடர்வதன் மூலம் தனது பதிலை வெளிப்படுத்தியது என்று அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்காவிடமிருந்து உடனடியாக எந்தக் கருத்தோ அல்லது உறுதிப்படுத்தலோ வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க உயர் பாதுகாப்பு அதிகாரிகள் பதவி நீக்கம்

### போருக்கு எதிரான கருத்துக்களின் விளைவு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது மூன்று உயர் நிலை அதிகாரிகளை பதவி நீக்கம் செய்துள்ளார். நாட்டு

02ம் பக்கம்பார்க்க...

## கம்மன்பிலவின் நூல் வெளியீட்டு விழாவில் சஜித் பங்கேற்பு

### இம்ரான் எம்.பீ. கடும் அதிருப்தி!

(பஹூஸ்)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவினால் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய நூல் வெளியீட்டு விழாவில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்கள் கலந்துகொண்டமை தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தனது கடும்

02ம் பக்கம்பார்க்க...

## எரிபொருட்களின் விலைகளை பன்மடங்காக உயர்த்திய பாகிஸ்தான்

### பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம்!

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச்சூழல் மற்றும் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக, பாகிஸ்தான் அரசு எரிபொருள் விலைகளை அதிரடியாக உயர்த்தியுள்ளது.

ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது விலை அதிகரிப்பு இதுவாகும்.

இதன்படி ஒரு லீற்றர் டீசலின் விலை 54.9வீ ஆல் அதிகரிக்கப்பட்டு, 520.35 பாகிஸ்தான்

02ம் பக்கம்பார்க்க...

## பலஸ்தீனை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த பிரான்ஸ்

### புதிய தூதுவரும் பதவியேற்பு!




பிரான்ஸ் - பாலஸ்தீன உறவில் வரலாற்றுத் திருப்பம்

சர்வதேச

02ம் பக்கம்பார்க்க...

## வளைகுடா மோதல்களை நிறுத்த உடனடி பேச்சுக்கள் அவசியம்

### ஐ.நா.செயலாளர் வலியுறுத்து



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச்சூழல் மற்றும் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக, பாகிஸ்தான் அரசு எரிபொருள் விலைகளை அதிரடியாக உயர்த்தியுள்ளது.

ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது விலை அதிகரிப்பு இதுவாகும்.

இதன்படி ஒரு லீற்றர் டீசலின் விலை 54.9% ஆல் அதிகரிக்கப்பட்டு, 520.35 பாகிஸ்தான் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 42.7% ஆல் அதிகரிக்கப்பட்டு, 458.40 பாகிஸ்தான் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஈரான் - அமெரிக்கா

02ம் பக்கம்பார்க்க...

## வளைகுடாப் போர் நீடித்தால் எமது பொருளாதாரம் வீழ்ச்சியடையும்

### அட்வகொட்டா நிறுவனத் தலைவர் முர்டஸா ஜெபர்ஜி

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் முடிவுக்கு வராவிட்டால், இலங்கைப் பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்க நேரிடும் என

02ம் பக்கம்பார்க்க...

## ஹோர்மோஸ் நீரிணை தீர்மானம்,ஐ.நா.வாக்கெடுப்பு இன்று

மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழலில், ஹோர்முஸ் நீரிணை (Strait of Hormuz) தொடர்பான

02ம் பக்கம்பார்க்க...

## F35 அமெரிக்க விமானத்தை சுட்டு வீழ்த்திய ஈரான்

விமானியும் சிறைப்பிடிப்பு
ஈரான் படையினரின் துணிகரம்
தேடுதலில் ஈடுபட்ட ஹெலியும் வீழ்த்தப்பட்டது

ஈரானிய வான் பரப்பில்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## ஹோர்மூஸ்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முக்கியத் தீர்மானத்தின் மீதான ஐநா பாதுகாப்பு சபை வாக்கெடுப்பு சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஏப்ரல் 3-ஆம் திகதி உள்ளூர் நேரப்படி காலை 11:00 மணிக்கு (ஜிஎம்டி 15:00) இந்த வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில், ஐநா இணையதளத்தில் இருந்து அந்த நிகழ்ச்சி நிரல் நீக்கப்பட்டிருந்தது.

ஒத்திவைக்கப்பட்ட ஐநா பாதுகாப்பு சபை வாக்கெடுப்பு; Strait Of Hormuz

ஈரானுக்கும் அமெரிக்க-இஸ்ரேலியப் படைகளுக்கும் இடையே போர் தீவிரமடைந்து வரும் நிலையில், இந்தத் தீர்மானத்தின் மீதான முடிவு சர்வதேச வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் துறையில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

## அமெரிக்க...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மக்களுக்கான உரையை நிகழ்த்திய சில மணித்தியாலங்களில் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்

ஈரானுக்கு எதிரான பொருத்தம் இல்லாத சாத்தியம் இல்லாத அநீதியான

தம்மை பொறுமைக்குள் சிக்க வைக்கும் போர் என இவர்கள் தொடர்ந்து வாதிட்டு வருவதனால் இவர்கள் இவ்வாறு

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

அமெரிக்கா பாதுகாப்புச் செயலாளர் Pete Hegseth அமெரிக்க கூட்டுப் படை தளபதியான Gen. Randy George) ஐயும் இவருடன் மேலும் இரண்டு அதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்து உள்ளதாக CBS News அறிவித்துள்ளது.

கடந்த கால யுத்தங்களின் போது அமெரிக்காவின் மிகச்சிறந்த போர் தந்திர அதிகாரிகளாக மதிக்கப்பட்டு வந்த இவர்களது பதவி நீக்கம்

அமெரிக்க பாதுகாப்பு கட்டமைப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாகவும் ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உதயம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

“உதயம்” பத்திரிகையின் பிரதம ஆசிரியராக சிரேஷ்ட ஊடகவியலாளர் யாஸீர் லாஹிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீன் தனது அனுபவ முதிர்ச்சியின் பிரகாரம் ஓய்வுபெறுவதைத் தொடர்ந்து பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தின் முழுப் பொறுப்பினை யாஸீர் லாஹிர் 04.04.2026 முதல் ஏற்றுக் கொள்கிறார்.

குறித்த தீர்மானம் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற உதயம் பத்திரிகையின் பணிப்பாளர் சபை தீர்மாணத்தின் பிரகாரம் அமுலுக்கு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஊடக துறையில் நீண்ட கால அனுபவங்களைக் கொண்ட யாஸிர் லஹீர், உள் நாட்டு, வெளி நாட்டு பல்கலைக்கழகங்களில் ஊடக துறை சார் கற்கைநெறிகளை பூர்த்தி செய்துள்ளார்.

தற்போது இவர் ஓமான் நாட்டின் அல்-உபைதானி சர்வதேச நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிதாக நியமனம் பெற்றுள்ள பிரதம ஆசிரியர் யாஸீர் லாஹிர் அவர்களுக்கு பத்திரிகைக் குழுமத்தின் உயரிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பலஸ்தீனை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அரசியலில் ஒரு முக்கிய மைல்கல்லாக, பிரான்ஸ் நாடு பாலஸ்தீனத்தை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, பிரான்சுக்கான பாலஸ்தீனத்தின் முதல் தூதராக ஹாலா அபூ ஹசீரா நியமிக்கப்பட்டுள்ளார்

முக்கிய அம்சங்கள்:

நற்சான்றிதழ் ஏற்பு: அதிபர் இமானுவேல் மேக்ரான், தூதர் ஹாலா அபூ ஹசீராவின் நற்சான்றிதழ்களை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

அரசியல் நிலைப்பாடு: 1967 எல்லைகளின்படி, கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட சுதந்திர பாலஸ்தீன அரசை அமைப்பதே இலக்கு எனத் தூதர் உறுதிபடத் தெரிவித்தார்.

உலகளாவிய அங்கீகாரம்: தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் 193 நாடுகளில் 157 நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளன.

முக்கியத்துவம்: ஐரோப்பாவின் வல்லரசுகளில் ஒன்றான பிரான்சின் இந்த அதிரடி முடிவு, பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு சர்வதேச அளவில் பெரும் பலத்தை சேர்த்துள்ளது.

## எரிபொருட்களின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 42.7ரூ ஆல் அதிகரிக்கப்பட்டு, 458.40 பாகிஸ்தான் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஈரான் - அமெரிக்கா இடையிலான போர் பதற்றத்தினால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலைகள் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுள்ளதாகப் பாகிஸ்தான் பெற்றோலியத்துறை அமைச்சர் அலி பர்வைஸ் மாலிக் தெரிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வு தவிர்க்க முடியாதது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கு நெருக்கடி ஆரம்பமாவதற்கு முன்னர், பாகிஸ்தானில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் 255 - 265 ரூபாய் என்ற அளவிலேயே காணப்பட்டன.

தற்போதைய புதிய திருத்தத்தின்படி, பெட்ரோல் விலை சுமார் 76 சதவீதமும், டீசல் விலை சுமார் 96 சதவீதமும் உயர்ந்துள்ளது.

முற்றிலும் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளையே நம்பியிருக்கும் பாகிஸ்தான் பொருளாதாரத்திற்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விலை உயர்வினால் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து, நாட்டில் பணவீக்கம் மேலும் உயரும் என பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## வளைகுடாப் போர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எச்சரிக்கப்பட்டுள்ளது.

அட்வொகாட்டா (Advocata) நிறுவனத்தின் தலைவர் முர்டசா ஜெபர்ஜி இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கையில் டீசல் விலை 600 ரூபாய் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் போக்குவரத்து மற்றும் மின்சாரக் கட்டணங்கள் உயர்ந்து, பணவீக்கம் 7 சதவீதம் வரை அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிநாட்டு வருமானத்தில் 70 சதவீதம் மத்திய கிழக்கில் வாழும் 10 இலட்சம் தொழிலாளர்கள் மூலமே கிடைக்கின்றன. இந்த நிலையில், போர்ச் சூழலால் அங்குள்ள தொழிலாளர்களின் வேலைநாட்கள் குறைக்கப்பட்டுள்ளதால், இலங்கைக்குக் கிடைக்கும் வருமானம் பெருமளவு வீழ்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




## வளைகுடா...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடையிலான போர் பதற்றத்தினால் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலைகள் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுள்ளதாகப் பாகிஸ்தான் பெற்றோலியத்துறை அமைச்சர் அலி பர்வைஸ் மாலிக் தெரிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வு தவிர்க்க முடியாதது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கு நெருக்கடி ஆரம்பமாவதற்கு முன்னர், பாகிஸ்தானில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் 255 - 265 ரூபாய் என்ற அளவிலேயே காணப்பட்டன.

தற்போதைய புதிய திருத்தத்தின்படி, பெட்ரோல் விலை சுமார் 76 சதவீதமும், டீசல் விலை சுமார் 96 சதவீதமும் உயர்ந்துள்ளது.

முற்றிலும் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளையே நம்பியிருக்கும் பாகிஸ்தான் பொருளாதாரத்திற்கு இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விலை உயர்வினால் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து, நாட்டில் பணவீக்கம் மேலும் உயரும் என பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## கம்மன்பிலவின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அதிருப்தியையும் அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“உதய கம்மன்பிலவின் நூல் வெளியீட்டு விழாவில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் கலந்து கொண்ட செய்தி எனக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில், எனது ஆதரவாளர்களும் பொதுமக்களும் எமது கட்சித் தலைவர் இந்த நிகழ்வில் பங்கேற்றதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்கின்ற அனைத்து இன மற்றும் மதத்தைச் சார்ந்த மக்களும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் உண்மையான குற்றவாளிகள் கண்டறியப்பட வேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், அரசியல் உள்நோக்கம் கொண்டதாகக் கருதப்படும் உதய கம்மன்பிலவின் குறித்த சர்ச்சைக்குரிய நூல் வெளியீட்டு விழாவில் எமது கட்சித் தலைவர் கலந்து கொண்டதை என்னால் ஒருபோதும் நியாயப்படுத்தவோ

## F35...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பறந்து கொண்டிருந்த கு 35 விமானத்தின் விமானியை நீண்ட நேர தேடுதலுக்குப் பிறகு கண்டு பிடித்துள்ளதாக ஈரானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

விமானியைத் தேடும் பணியில் விஷேட படைக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் விமானியை கண்டு பிடித்துத் தருவோருக்கு பெருந்தொகை சன்மானம் தரப்படுமென்றும் ஈரானிய அரசாங்கம் அறிவித்தல் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மற்றொரு விமானியை தாம் மீட்டிருப்பதாக அமெரிக்க படையினர் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த செய்தி உறுதிப்படுத்தப்படவில்லை.

# ஈரான் வெற்றி பெறுவது மூன்றாம் உலக நாடுகளின் மக்களினதும் தேவை:

## அட்டாளைச்சேனையில் மு.கா.தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு







யுத்தத்தில் ஈரான் வெற்றி பெற வேண்டும் என்பது உலகளாவிய முஸ்லிம்களுடைய எதிர்பார்ப்பு மாத்திரமல்ல, எல்லா அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மூன்றாம் உலக நாடுகளின் மக்களின் தேவையுமாகும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.
அட்டாளச்சேனை, அல் இபாதா கலாசார மன்றத்தின் 15 ஆவது இப்தார் நிகழ்வும், பரிசளிப்பும் ஞாயிற்றுக்கிழமை(15), பெரிய பாலத்தடி மைதானத்தில் நடை பெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.
அங்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது, எமக்கு ரமழான் மாதம் பல படிப்பினை களை ஒருசேர கற்றுத் தருகிறது. தேவையுள்ளவர்களுக்கு கொடுத்து வாழ்கிற ஈகைப் பண்போடு சேர்த்து, சகிப்புத்தன்மை பாவமன்னிப்பு கோருதல் மற்றும் ஆன்மாவையும், உடலையும் தூய்மைப்படுத்திக்கொள்ளுதல் ஆகிய உயரிய நோக்கங்களோடு இறைவன் எங்களுக்கு இந்த ரமழான் மாதத்தை அருளியுள்ளான். ஆயினும் இந்த புனித மாதத்திலும் கூட அவ்வப்போது நாங்கள் பல்வேறு சோதனைகளைச் சந்திக்க நேரிடுகின்றது.
முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் சொன்னது போல் ஏகாதிபத்தியவாதிகளின், சியோனிச ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியங்களை நாள்தோறும் நாங்கள் பார்த்துவருகிறோம். அதன் விளைவாக இன்று முழு உலக பொருளாதாரத்தையும் பாரிய பாதிப்புக்குள் ஆக்குகிற ஓர் ஆபத்தை நாங்கள் எதிர்நோக்கி இருக்கிறோம். எமது நாடு மாறிமாறிவந்த பல அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு, அண்மையிலும் காலநிலை அனர்த்தத்தை நாங்கள் சந்தித்தோம். எனவே இந்த பாதிப்புகளுக்கு மத்தியில் ஒருவாறு எங்களை சமாளித்துக் கொண்டு மீண்டு வந்துவிடலாம் என்று நினைத்ததிருந்தோம். இந்த நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு வருகின்ற ஒரு சந்தர்ப்பத்தில், ஏராளமான உல்லாசப்பயணிகள் எங்களுடைய நாட்டுக்கு வரத்தொடங்கிவிட்டார்கள். தாராளமாக வெளிநாடுகளில் வேலை செய்கின்ற எம்மவர்களுடைய அந்நியச் செலாவணி நாட்டின் இருப்பை முன்னேற்றுவதற்கு பெரிதும் உதவும் என்றெல்லாம் கொஞ்சம் நிம்மதி அடைந்து கொண்டிருக்கிற ஒரு சந்தர்ப்பத்தில்தான் நினையாப் புறமாக இந்த உலகத்திற்கும் ஒரு சாபக்கேடாக நாங்கள் பார்க்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சிறுபிள்ளைத்தனமான பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கிறார். அவரது எதேச்சாதிகரமான நடவடிக்கை இன்று எங்களுக்கு மாத்திரமல்ல, முழு உலகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் பின்னணி என்ன என்று மிகத் தெளிவாக எல்லோருக்கும் தெரிகிறது .
நோன்பு கால பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருக்கின்றோம். இந்த அட்டூழியங்களுக்கு இறுதி முடிவாக இந்த யுத்தத்தில் ஈரான் வெற்றி பெற வேண்டும் என்பது உலகளாவிய முஸ்லிம்களுடைய கோரிக்கை மாத்திரமல்ல, எதிர்பார்ப்பு மாத்திரமல்ல எல்லா அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மூன்றாம் உலக நாடுகளின் மக்களின் தேவையுமாகும் எனத் தெரிவித்தார்.
இந் நிகழ்வில் உலமாக்கள், தீகவாபி விகாராதிபதி, இந்து கிறித்தவ மத குருமார், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.அப்துல் வாசித், கோடீஸ்வரன், முன்னாள் பிரதியமைச்சர் பைசல் காசிம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளருமான எம். எம்.முஷர்ரப், மு.கா.பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதிர், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், திகாமடுல்ல மாவட்ட செயலாளர், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கலா விஸ்வநாதன் நினைவரங்கில் 121ஆவது வலம்புரி கவிதா வட்ட கவியரங்கு



**( ஐ. ஏ. காதிர் கான் )**

**(படங்கள் - எம்.பீ.எஸ். பாலா)**

வலம்புரி கவிதா வட்டத்தின் 121 ஆவது கவியரங்கு, (01/04/2026) பௌர்ணமி தினம் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடை பெற்றது. அண்மையில் மறைந்த வகவ முன்னாள் தலைவரும், தேசிய அமைப்பாளருமான கலா விஸ்வநாதனை நினைவுகூர்ந்து கலா விஸ்வநாதன் நினைவரங்கில் நடைபெற்ற நிகழ்வை, வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார்.

வரவேற்புரை செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீனாலும், நன்றியுரை பொருளாளர் ஈழ கணேஷினாலும் நிகழ்த்தப்பட்டன.

நிகழ்வில், மறைந்த கலா விஸ்வநாதனின் குடும்ப அங்கத்தவர்கள் வினோகாந்தன், சந்திரகாந்தன், வி. சுகன்யா, கலாவின் பேரப்பிள்ளைகள் ஆகியோர் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

மறைந்த கலா விஸ்வநாதன், சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ரிஸ்வி ஷெரீப் ஆகியோருக்கான மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

கலா விஸ்வநாதன் பற்றிய நினைவுரையை, வகவப் பொருளாளர் ஈழ கணேஷ் மேற்கொண்டார்.

"கலா விஸ்வநாதனுக்கும் எமக்குமான தொடர்பு ஐந்து தசாப்தங்களைத் தாண்டியது. இலக்கிய உலகில் மிக நீண்ட காலம் அவர் இருந்தபோதும் மிகவும் அடக்கமாகவே இருந்தார். எதற்குமே தர்க்கம் புரியாத ஒருவராக அவர் இருந்தார். அவரிடம் உயரிய பண்புகளை மட்டுமே நாங்கள் கண்டிருக்கிறோம். ஆரம்ப காலங்களில் வகவ நடவடிக்கைகளில் துணை நின்றது போன்றே மீள் ஆரம்பத்தின் பின்னரும் துணை நின்றார். 'இதய வீணை', 'ஏணிப்படிகள்', ''சித்தரமிர்தம்' ஆகிய நூல்களை வெளியிட்டதோடு, 'கவின்' என்ற இலக்கிய சஞ்சிகையையும் நடத்தி வந்தார்.


எமது வகவ உறவாய்த் திகழ்ந்த அவரை வலம்புரி கவிதா வட்டம் என்றுமே மறக்காது. இலக்கிய உலகில் அவரது நாமம் நிலைத்து நிற்க வழி சமைக்கும்' என்று கூறினார்.

இந்த 121 ஆவது கவியரங்கை, கவிஞர் ஆர். தங்கமணி தலைமையேற்று சுவையாக நடாத்தினார். கவியரங்கில் கவிஞர்கள் மஸீதா அன்சார், தாராபுரம் என்.பி.எம். தஸ்லீம், இ. கலைநிலா, கிண்ணியா அமீர் அலி, மினுவாங்கொடை ஏ. சிவகுமார், காத்தான்குடி நிஷவ்ஸ், அருணா அருந்தவம், மஸாஹிரா கனி, ஹஸனார் ஐயூப்கான் , கலேவெல ராஜன் நசீர்தீன், பிறைக்கவி முஸம்மில், ராஜா நித்திலன், இளநெஞ்சன் முர்ஷிதீன், இறைஞானக் கவி ரமீஸ் பீர் முஹம்மத், மலாய்கவி டிவாங்சோ, கே. கிருஷ்ணன், வாழைத்தோட்டம் எம். வஸீர், கம்மல்துறை இக்பால், எம்.பீ.எஸ். பாலா, சிந்தனைப்பிரியன் முஸம்மில் ஆகியோர் கவிதைகள் பாடினர்.

சபையை, தமிழ்த்தென்றல் அலி அக்பர், சு. ஜெகதீஸ்வரன், ரவூப் ஹஸீர், ஏ ஆர்.எம். முஸம்மில், கவிநேசன் நவாஸ், ஏறாவூர் எம்,ஏ.சீ.ஏ. லத்தீப், நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், ஏ.கே. இளங்கோ, எம்.எஸ்.எம். யெஹ்யா, கவிதா இளங்கோ, இல்யாஸ் தாஸிம், ஜொயெல் ஜோன்சன், எஸ்.என். கிருஷ்ணபிரியன் உள்ளிட்டோர் அலங்கரித்தனர்.

# கொழும்பு - அஹதிய்யாப் பாடசாலையின் 41ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா







**( ஐ. ஏ. காதிர் கான் )**

கொழும்பு - அஹதிய்யாப் பாடசாலையின் 41ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா, கொழும்பு - பம்பலப்பிட்டி, முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஹாஜரா மண்டபத்தில், அண்மையில் சிறப்புற நடைபெற்றது.
இவ்விழாவின்போது, மாணவிகளின் கல்விசார் சிறப்புகளும் நற்பண்புகளும் கௌரவிக்கப் பட்டன.

நிகழ்வில், கொழும்பு அஹதிய்யாப் பாடசாலை - மகளிர் பிரிவின் தலைவர் மற்றும் அஹதிய்யாப் பாடசாலைகளின் நிறுவுனர் மர்ஹூம் எம்.எச்.ஏ. அசீஸ் அவர்களின் புதல்வி திருமதி மின்ஹா அஹமத், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

"சிறந்த மாணவர்களுக்கான விருது" என்பது, கொழும்பு அஹதிய்யாப் பாடசாலையின் அதி சிறப்பு மிகு மாணவர்களுக்கு வழங்கப்படும் உயரிய மற்றும் மதிப்புமிக்க விருதாகும்.
இந்த விருது, இலங்கையில் அஹதிய்யாப் பாடசாலைகளை நிறுவிய மர்ஹூம் எம்.எச்.ஏ. அசீஸ் மற்றும் அவரது துனைவியார் மர்ஹூமா ஜிஃப்ரியா அசீஸ் ஆகியோரின் நினைவாக வழங்கப்படுகிறது.

இவ்விருதினை, அவர்களின் குடும்பத்தினர் இன்றும் தாராளமாக வழங்கி வருகின்றனர்.

இவ்வருடம், இச்சிறப்பு விருதுகளைப் பெற்ற மாணவிகளான மரியம் ஃபர்ஹான் - தரம் 3 (தமிழ் - கனிஷ்டப் பிரிவு)
ஆயிஷா அம்னா ஹஸன் - தரம் 11 (சிங்களம் - சிரேஷ்டப் பிரிவு)
ஆகியோரது சாதனைகள், கொழும்பு - அஹதிய்யாப் பாடசாலையின் கல்விசார் திறமைகளையும் உயரிய மதிப்பீடுகளையும் பிரதிபலித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உக்குவளை சந்தியில் வடிகான் சுத்திகரிப்பு



உக்குவளை மாருகொன சந்தியில் பிரதான பாதையோரமாக (பள்ளிவாசல் முன்பாக ) அமைந்த வடிகாணில் நீண்டகாலமாககழிவுப் பொருட்கள் நிறைந்து கழிவு நீர்போகமுடியாத அடைப்பு ஏற்பட்டிருப்பதையறிந்து உக்குவளை பிரதச சபை உதவித் தலைவர் எம்.ராபி சக ஊழியர்கள் உதவியுடன் வடிகாண் பகுதி நேற்றுமுன் தினம் துப்புரவு செய்து சீரமைக்கப்பட்டது. **(உக்குவளை ஜெலீல் )**

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2026 APRIL 04 - SATURDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

# இஸ்ரேலின் மரண தண்டனை சட்டத்தை சகலரும் எதிர்க்க வேண்டும்

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீன கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றக்கூடிய சட்டமொன்றை இஸ்ரேல் பாராளுமன்றம் கடந்த 29ஆம் திகதி நிறைவேற்றியுள்ளது. ஜெனிவா உடன்படிக்கையின் பொதுவான பிரிவு மூன்றின் மீது நிறைவேற்றப்பட்டுள்ள இந்த சட்டம் மனித குலத்துக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள மிக மிக மோசமான சட்டமாகும்.

இஸ்ரேல் சிறைச்சாலைகளில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கைதிகள் இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது நாளாந்தம் அதிகரித்தும் வருகின்றது. மனித குல வரலாற்றில் இப்படியான ஒரு சட்டம் நிறைவேற்றப்படுவதை கண்டு ஒட்டுமொத்த உலகும் அமைதி காத்து வருவது கவலைக்குரியது.

இந்த சட்டத்தை நிறைவேற்றிய பின் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் மது அருந்தி கூத்தாடி மகிழ்ச்சி கொண்டாடும் காட்சிகளை காண கிடைத்தது. இஸ்ரேலியர்களிடம் எந்த அளவுக்கு மனிதாபிமானம் இல்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

இந்த சட்டத்துக்கு இஸ்லாமிய நாடுகள் தனது கடும் தொனியிலான எதிர்ப்பை காட்ட வேண்டும். இஸ்ரேலுடன் நெருங்கி செயல்படுகின்ற இஸ்லாமிய நாடுகள் தனது செல்வாக்கை பயன்படுத்தி இந்த சட்டத்தை வாபஸ் பெற செய்ய வேண்டும்.

இஸ்ரேலியர்களால் கைது செய்யப்பட்டுள்ள பலஸ்தீனியர்கள் அப்பாவிகளாவர். எந்தவிதமான கேள்விகளும் இல்லாமல் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் உட்பட பல மேற்கு நாட்டு மக்கள் இந்த சட்டத்துக்கு தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈரானுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் கடும் யுத்த காலத்திலேயே இஸ்ரேல் இந்த சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

இந்த யுத்தத்தில் இஸ்ரேலுக்கு நாளுக்கு நாள் ஏற்படும் அதிருப்தியினை ஈடுசெய்யவே இஸ்ரேலின் தற்போதைய ஆட்சியாளர்கள் அதாவது நெதன்யாஹு அரசாங்கம் இச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இஸ்ரேல் நாட்டு மக்கள் கூட ஏற்றுக்கொள்ள மறுக்கும் இச்சட்டத்தை எதிர்க்க மனித உரிமையை மதிக்கும் சகலரும் முன்வர வேண்டும். ஈரான் இஸ்ரேல் யுத்தம் நடைபெறும் இந்த காலத்தில் முழு உலகையும் திசை திருப்பவே இந்த சட்டத்தை இஸ்ரேல் நிறைவேற்றியுள்ளது.

இச் சட்டம் நிறைவேறுவதை முழு மானிட சமூகமும் எதிர்க்க வேண்டும். மானிட சமூகத்தை மதிக்காத, மனித குலத்தை அவமதிக்கும் இந்த சட்டம் நிறைவேறாமல் தடுக்க ஒவ்வொருவரும் தம்மாலான பங்களிப்பை செய்ய முன்வர வேண்டும்.






# வளைகுடா போரால் உலகளாவிய பொருளாதார நெருக்கடி உருவாகும் அபாயம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்



ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்திய பின்னர் ஈரான் பதிலடியாக மத்திய கிழக்கின் எண்ணெய் பரிகரண கப்பல் மார்க்க மான ஹோர்மூஸ் கால்வாயை மூடிவிட நடவடிக்கை எடுத்தது. அதனால் உலகின் பல நாடுகளுக்கு எண்ணெய் கொண்டு போக முடியாததால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் ஈரானின் அறிவிப்பை மீறி போக முயற்சிக்கும் கப்பல்கள் மீது ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தி கப்பல்களை மூழ்கடிக்கும் நடவடிக்கையிலும் இறங்கி இருக்கின்றது. இவ்வாறு கால்வாயை ஈரானின் இந்த நடவடிக் கையால் கிழக்காசிய நாடுகள் மாத்திரமன்றி ஐரோப்பிய நாடுகள் உட்பட அமெரிக்காவும் கூட மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டிருக் கின்றது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளதும் உயிர் நாடியாக இருந்து வருவது எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள் மற்றும் சக்தி வலு, எரிவாயு ஆகும். ஆனாலும் இந்த மூலப்பொருட்களை உலகிற்கு விநியோகிக்கும் மார்க்கம் தடைப்பட்டால் அதனை நம்பி செயற்படும் அனைத்து நாடுகளும் பாதிக்கப்ப டுகின்றது. இலங்கையில் கூட ஒருபோதும் இல்லாத அளவிற்கு 2022 ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் மீண்டும் லீட்டர் ஒன்று 400 வரை என்ற நிலைக்கு எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்துவிட்டன. அனைத்து விதமான அத்தியா வசிய பொருட்கள், சேவைகளிலும் விலை உயர்வுகள் ஏற்பட்டுள்ளன. அரச மற்றும் தனியார் துறைகளிலான சேவைகள், உற்பத்தித் துறைகளிலான பாதிப்பு என்று பலவிதமான பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. பிரதிபலனாக பொருளாதார நெருக்கடி ஏற்படுவது உறுதியாக தெரிகின்றது. தொடரும் தற்போதைய யுத்த நிலையில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கப்பல்கள் ஹோர்மூஸ் வழியாக எண்ணெய் கொண்டுபோக விதித்த தடை தொடர்கின்றன. இந்நிலையில் ஹோர்மூஸ் கால்வாயை திறக்க அமெரிக்காவுக்கு உலக நாடுகள் உதவி செய்ய முன்வரவேண்டும் என்ற கோரிக்கையும் ஏனைய நாடுகளால் கவனத்தில் எடுக்கப்பட வில்லை. நேட்டோ நாடுகளும் அமெரிக்க ஜனாதிபதியின் வேண்டு கோளை அங்கீகரித்ததாக எந்த விதமான சமிஞ்சைகளும் வெளிப்படவில்லை. அதனால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வீராப்பு அடங்கிப் போனது.

கால்வாயை திறந்து கப்பல்களை போகச் செய்ய 48 மணித்தியால காலக்கெடு ஒன்றை ஈரானுக்கு அறிவித்தார். ஈரான் 48 மணித்தியால த்திற்குள் ஹோர்மூஸ் கால்வாயை திறந்து கப்பல்கள் போக அனுமதிக் காவிட்டால் அமெரிக்கா ஈரானின் அணுசக்தி மற்றும் எரிவாயு தளங்களை தாக்கி அழிக்கும் என்று 2026.03.21 ஆம் திகதி ஒரு அறிவிப்பை செய்து ஈரானை மிரட்டினார். சில நிபந்தனைகளையும் ஈரானுக்கு விதித்தார் ட்ரம்ப்.

பதிலுக்கு ஈரானும் நீ முடியுமானால் தாக்கிப் பார். தாக்கினால் நாங்களும் பதிலுக்கு திருப்பி பிராந்திய நாடுகளில் இருக்கின்ற எண்ணெய் வயல்கள் மற்றும் எரிவாயு மற்றும் சக்தி வலு தளங்களை தாக்கி அழிப்போம் என்ற அறிவிப்பை செய்தது. இந்த அறிவித்தலால் ஒருவகையில் ட்ரம்ப் மிரண்டு போனார் போலும். உலக நாடுகள் ட்ரம்பின் 48 மணித்தியால நிபந்தனையுடனான காலக்கெடுவை மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தனர். அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்ச நிலையும் ஏற்பட்டது. தவறியாவது ட்ரம்ப் முரட்டுத்தனமான நடவடிக்கை யாக ஈரான் மீது மோசமான தாக்குதலை திணித்தால் பதிலுக்கு ஈரானும் அதே அளவிலான பாரிய தாக்குலை துவங்கினால் உலகில் பாரிய எரிபொருள், எரிசக்தி நெருக்கடி ஏற்படலாம். அதனோடு பொருளாதார நெருக்கடியும் கூடவே ஏற்படலாம் என்ற அச்சம் மேலிட்டது.



பதிலுக்கு 23 ஆம் திகதி 48 மணித்தியால காலக்கெடு முடிவடைய 14 மணித்தியாலங்கள் இருந்த நிலையில் ஈரானின் எரிபொருள் மற்றும் அணுசக்தி மையங்கள் மீதான தாக்குதலை 05 நாட்களுக்கு அதாவது 2026.03.26 ஆம் திகதி வரை பின்போடுவதாகவும் பதிலுக்கு ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் ட்ரம்ப் அறிவித்தார். அத்துடன் ட்ரம்ப் ஈரானுக்கு சில நிபந்தனை களையும் விதித்திருந்தார். அந்த நிபந்தனைகளில் சில வருமாறு. ட்ரம்பின் இந்த பேச்சு வார்த்தை நாடகத்தை அரங்கேற்ற பாகிஸ்தான் உதவி இருக்கின்றது.

ஈரான் அணுசக்தி செறிவூட்டல் செயற்றிட்டங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். துணை ஆயுதக் குழுக்களான ஹிஸ்புல்லா, ஹூதி உட்பட இஸ்ரேலுக்கு எதிராக செயற்படும் அமைப்புக்களுக்கு ஈரான் வழங்கும் உதவிகளை நிறுத்த வேண்டும். ஈரான் நீண்ட தூர ஏவுகணை உற்பத்தியை நிறுத்த வேண்டும். ஆனால் உள்நாட்டு பாதுகாப்புக்கான ஆயுத உற்பத்திகளை மட்டும் மேற்கொள்ள இடமளிக்கப்படும் என்பது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இன் நிபந்தனைகளாகும். இந்நிலையில் ஈரானும் சும்மா இருக்கவில்லை. ட்ரம்பிற்கு பதிலடியாக சில நிபந்தனை களை விதித்திருக்கின்றது.

பதிலுக்கு ஹோர்மூஸ் கால்வாயை திறக்கவும் யுத்தத்தை நிறுத்தவும் வேண்டுமானால் நாம் சொல்வதை நீ செய்ய வேண்டும் என்று ஈரான் அமெரிக்காவுக்கு சில நிபந்தனைகளை விதித்தது. ஈரான் மீது நடத்தப்படுகின்ற தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டும். ஈரான் என்பது இறைமை, தன்னாதிக்கம், சுயாதிபத்தியம் கொண்ட சுதந்திர நாடாகும். அந்நாட்டின் பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் வேண்டும். ஈரானுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் பாதிப்புக்க ளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். கால்வாயை திறக்க நாம் தயார். ஆனால் ஈரானின் சுதந்திர வர்த்தகத்திற்கு இடையூறு ஏற்படுத்த முடியாது. ஈரான் மீதான பொருளாதார தடைகள் நீக்கப்பட வேண்டும். ஈரானின் அணு செறிவூட்டல், எரிசக்தி மற்றும் எரிவாயு தளங்களை அமெரிக்கா தாக்கி அழித்தால் அந்த அழிவுகளை அதே அமெரிக்கா சரி செய்து திருத்தி, முன்னிருந்தது போன்று அமைத்து தரும்வரையில் ஹோர்மூஸ் கால்வாய் திறக்கப்பட மாட்டாது. ஹோர்மூஸ் கால்வாய் முழுவதுமாக எந்தவொரு கப்பல்களும் போக முடியாதபடி கடல் கண்ணி வெடிகளால் நிரப்பப்படும். ஹோர்மூஸ் சுதந்திர போக்குவரத்துக்கு திறக்கப்பட வேண்டுமானால் இந்த நிபந்தனை களுக்கு அமெரிக்கா இணங்க வேண்டும். ஈரானுக்கு யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகள், பாதிப் புக்களுக்கு அமெரிக்கா நஷ்டஈடு வழங்க வேண்டும். அதே நேரம் ஈரானுக்கு ஆதரவான அதுவும் இந்த யுத்தத்தில் ஈரானுக்கு எதிரான பக்கத்தை எடுக்காத நாடுகளின் எண்ணெய் கப்பல்கள் ஹோர்மூஸ் வழியாக போகலாம். அதற்கான பாதுகாப்பு வழங்கப்படும் போன்ற நிபந்தனைகள் ஈரானால் முன்வைக்கப்பட்டவை களாகும்.

இவ்வாறாக ஈரான் ரம்பிற்கு கடுமையான பதில் நிபந்தனைகளை விதித்த நிலையில் ட்ரம்ப் 48 மணித்தியால காலக்கெடுவை 05 நாள் காலக்கெடுவாக மாற்றி ஈரானுடன் இரண்டு தினங்களாக பேச்சுவார்த்தை நடத்தி யதாகவும் அவை திருப்திகர மானதாக அமைந்ததாகவும் தொடர்ந்து இந்த 05 நாட்களும் பேச்சு நடத்துவதாகவும் அறிவித்துள்ளார். ஆனாலும் ஈரான் தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்ற ட்ரம்ப் இன் அறிவிப்பை மறுத்து இருக்கின்றது. இருந்தாலும் அமெரிக்க ஜனாதிபதி ஈரானில் இருக்கின்ற அரச விரோத சக்திகளை பேச்சுவார்த்தை என்று அடையாளம் கண்டு ஒரு சில அதிகாரத்தில் இல்லாத வர்களுடன் பேச்சு நடத்தி ஈரானில் உட்பிளவையும் பூசல்களையும் உருவாக்கி ஈரானின் ஆட்சிக்கு எதிரான கலவர நிலையை ஏற்படுத்துவதற்கான பிரித்தாளும் தந்திரோ பாயத்தை கையாள்கின்றார் என்பது உறுதியாகின்றது. எவ்வாறோ 05 நாள் காலக்கெடு 2026.03.27 ஆம் திகதி முடிவடைந்துவிட்டது. ஹோர்மூஸ் கால்வாயில் தொடர்ந்தும் எண்ணெய் ஏற்றிய கப்பல்கள் போக முடியாத படி தடை ஏற்படுத்தப்பட்டதால் சர்வதேச அரங்கில் எண்ணெய் விலை பீப்பா ஒன்றிற்கு 150 டாலர் வரை ஏறும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு விலை அதிகரிப்பு ஏற்படுமானால் அமெரிக்கா உட்பட அதிகமான நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு பாரிய பின்விளைவுகள் ஏற்பட இடமிருக்கின்றது. அத்தனை பாதிப்புக்களுக்கும் அமெரிக்காவும் இஸ்ரேலும்தான் பதில் சொல்ல வேண்டும். ஏனெனில் இது ஈரான் மீது திணிக்கப்பட்ட ஒரு யுத்தமாகும். ஈரான் தானாக யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. இது அந்நாட்டின் மீது அமெரிக்காவின் வழிநடாத்தலில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலாகும்.

பதிலுக்கு இறைமை உள்ள நாடு என்ற முறையில் தன்னை பாதுகாத்துக்கொள்ள இருக்கின்ற கடப்பாட்டின் அடிப்படையில் பதில் தாக்குதலை ஆரம்பித்ததால் ஈரான் வலிந்து யுத்தத்தின் பால் இழுத்து எடுக்கப் பட்டதாகும். அத்துடன் அமெரிக்கா இந்த விடயத்தில் பின்வாங்கினால் இந்த பிராந்தியத்தில் ஈரானில் பலம் ஓங்க ஆரம்பிக்கும். அத்துடன் சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதிக்கமும் மேலோங்கும். இவ்வாறான ஒரு நிலை உருவாகினால் அது அமெரிக்காவுக்கு பலமான அடியாகும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது ஒருபுறம் இருக்க அமெரிக்கா, தனது அதிகார வலுச் சமநிலையை பாதுகாத்து உலக அரங்கில் தலைகுனியாமல் இருப்பதையும் இந்த ஈரானுடனான மோதலில் இருந்து வெளிக்காட்ட வேண்டிய இரண்டும் கெட்டான் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் யுத்த நிலை தொடருமானால் பிரதான நாடான அமெரிக்கா கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து பூலோக அரசியலில் பிடித்துள்ள இடம் சரிய ஆரம்பித்து விடும். அரேபிய வளைகுடா நாடுகளை நம்பி இருக்கின்ற நாடுகளும் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் அபாயம் தென்படுகின்றது.

அதனால் அமெரிக்கா இஸ்ரேல் ஆகிய நாடுகளால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவதென்பது பாரிய பிரச்சனையாகும். அமெரிக்காவுக்கு ள்ளும் இஸ்ரேலிலும் மக்கள் வீதிக்கு இறங்கி ஜனாதிபதி ட்ரம்பிற்கும் இஸ்ரேல் பிரதமருக்கும் எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். ஈரானில் உள்நாட்டு கிளர்ச்சியை ஏற்படுத்தி ரெஜீம் சேன்ஜ் அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி மன்னர் ஷாவின் வாரிசான அவரது மகனின் தலைமையிலான அமெரிக்கா சார்பான பொம்மை ஆட்சியை ஏற்படுத்த எடுத்த முயற்சி வீண்போகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. பதிலாக அமெரிக்காவிற்குள் போராட்டம் உக்கிரமடைந்தால் ஈரானுக்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதியின் பதவி கவிழுமா என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.





எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist,
Chennai -
Tamilnadu, India)



# ஈரான் அமெரிக்க போர் தெளிவான வெற்றி யாருக்கு?

ஈரான் அமெரிக்கா இடையேயான போரில் வெற்றி யாருக்கு என்கிற தெளிவான கேள்விக்கு தற்போது பதில் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. ஈரான் இந்த போரில் உலகின் ஒழுங்கமைப்பை முற்றிலுமாக மாற்றி அமைத்துள்ளமை மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது. இனி வரும் காலங்களில் மத்திய கிழக்கில் உள்ள எல்லா அரபு நாடுகள் மத்தியில் அமெரிக்கா தனது வலிமையான அரசியல் மற்றும் ராணுவ பலத்தை நிரூபிக்க மிகவும் கடுமையாக போராட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதால் இது உலகிற்கு மிகவும் வியப்பான பல்வேறு நிலையான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெளிப்படையாக தனது இலக்கின் வழியை தான் இழந்து விட்டதாக அவர் ஒப்புக்கொண்டார். எனவே தான் ஈரான் இந்த அளவுக்கு ஆயுதங்களை கொண்டு செயல்படும் என்பதை தான் அறிந்திருக்க வில்லை என்று வெளிப்படையாக தனது பலவீனத்தை அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த போரில் குறைந்தது 16 அமெரிக்க இராணுவ விமானங்கள் இதுவரை அழிக்கப்பட்டுள்ளன என்பதுடன், அவற்றில் 11 ஆகு-9 ரீப்பர் ஆளில்லா விமானங்கள் எதிரித் தாக்குதல்களில் சுட்டு வீழ்த்தப்பட்டவை எனவும் கூறப்படுகிறது.

மேலும் பல விமானங்கள் தாக்குதல்கள் மற்றும் செயல்பாட்டுச் சம்பவங்களால் சேதமடைந்துள்ளன. குறிப்பாக, குவைத்தில் தற்செயலாக நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் மூன்று கு-15 ரக போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதும், நடுவானில் எரிபொருள் நிரப்பும் நடவடிக்கையின் போது ஒரு KC-135 விமானம் விபத்துக்குள்ளாகி அதில் இருந்த ஆறு பணியாளர்கள் உயிரிழந்ததும் இந்த மோதலின் கடுமையை வெளிப்படுத்துகிறது.

சவூதி அரேபியாவில் உள்ள ஒரு தளத்தின் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலால் மேலும் ஐந்து KC-135 ரக விமானங்கள் சேதமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே சமயம், ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள் குறிப்பாக ஆளில்லா ரீப்பர் ட்ரோன்களை குறிவைத்து தாக்கியுள்ளன. குறைந்தது ஒன்பது ட்ரோன்கள் பறக்கும் போதே சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், ஜோர்டானில் உள்ள ஒரு விமான தளத்தில் இருந்த ஒரு ட்ரோன் பாலிஸ்டிக் ஏவுகணையால் தரையில் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மற்ற இரண்டு ட்ரோன்கள் தொழில்நுட்ப கோளாறுகள் மற்றும் விபத்துகளால் இழக்கப்பட்டன.

போர் மூன்றாவது வாரத்தில் நுழைந்துள்ள நிலையில், ஈரான் தனது தாக்குதல்களை தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது. குறிப்பாக, சவுத் பார்ஸ் எரிவாயு வயல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பதிலாக, கத்தார் மற்றும் சவூதி அரேபியாவில் உளள எரிசக்தி உள் கட்டமைப்புகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பிராந்தியத்தில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளதுடன், முக்கிய எரிசக்தி வழித்தடங்களின் பாதுகாப்பு குறித்து சர்வதேச அளவில் கவலை எழுந்துள்ளது.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தவறான முடிவுகளை எடுத்ததன் காரணமாக மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை சந்தித்து வரும் நிலையில் அதனைத் ஏற்று கொள்ள மறுத்து பொய்யான செய்திகளை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உலகிற்கு



எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. ஈரான் இந்த போரில் மூலம் தாங்கள் எந்தவொரு நிலையிலும் சமாதானம் செய்து கொள்ள தயாராக இல்லை என்று அறிவிப்பு செய்துள்ள நிலையில் அமெரிக்கா மிகக் கடுமையாக பொருளாதார மற்றும் உயிரிழப்புகளை சந்தித்து வரும் நிலையில் சமாதானம் தேடி அமெரிக்கா ஈரான் மீதான பொருளாதார தடைகளை நீக்கி போரில் இருந்து தங்களை

சுயாதீனமாக தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்து வருவதைக் காணலாம். இந்த போரின் மூலம் அமெரிக்கா இதுவரை 200 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தை இழந்து தவிக்கும் நிலையில் அடுத்த கட்ட நகர்வுகளை நோக்கி நகர முடியாமல் அமெரிக்கா தவித்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் இஸ்ரேலின் முக்கிய நகரங்கள் ஈரான் நாட்டின் ஏவுகணை தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் முற்றிலுமாக அழிந்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகள் அமெரிக்கா மீது மிகுந்த அதிருப்தி அடைந்த நிலையில் அமெரிக்கா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட ஜெரால்ட் ஆர் ஃபோர்ட், யு எஸ் எஸ் ஆப்ரஹாம் லிங்கன் போர்க்கப்பல்கள் பதட்டத்துடன் பாரசீக வளைகுடா பகுதியில் இருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா மட்டுமல்லாமல் மேற்கத்திய ஊடகங்கள் இந்த உண்மை செய்தியை மறைத்து வரும் நிலையில் ஈரான் தனது வலிமையான தொழில் நுட்ப சாதனங்கள் மூலம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளையும் மூச்சுத் திணற வைத்து விட்டது என்பதே உண்மையாகும். ஈரான் சிஜ்ஜில், கைபர் ஷெக்கான், பத்தா, சஹாபாப், இமாமத் போன்ற வலிமையான ஏவுகணை மூலம் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் ஈரானிடம்

மண்டியிட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதால் தான் அமெரிக்கா ஹெர்மூஸ் வளைகுடா பகுதியில் இருந்து ஈரானிடம் கச்சா எண்ணெய் பேரல்களை வாங்கிக் கொள்ளலாம் என்று முழுமையாக இறங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கோபத்தின் உச்சிக்கு சென்று ஐரோப்பிய ஒன்றியத்தினை முழுமையாக கடுமையாக விமர்சித்து



இருப்பதை நாம் காணலாம். அதாவது, அமெரிக்கா இல்லையென்றால், நேட்டோ ஒரு காகிதப் புலி! அணுசக்தி கொண்ட ஈரானை நிறுத்துவதற்கான போராட்டத்தில் அவர்கள் சேர விரும்பவில்லை. இப்போது அந்தப் போர் ராணுவ ரீதியாக வெல்லப்பட்டுள்ளது, அவர்களுக்கு மிகக் குறைந்த ஆபத்தே உள்ளது, ஆனால் தாங்கள் செலுத்த வேண்டிய அதிக எண்ணெய் விலையைப் பற்றி அவர்கள் புகார் கூறுகிறார்கள். ஆனால், அதிக எண்ணெய் விலைக்கு ஒரே காரணமான ஹார்முஸ் நீரிணையைத் திறக்க உதவ அவர்கள் விரும்பவில்லை இது ஒரு எளிய ராணுவ நடவடிக்கை. மிகக் குறைந்த ஆபத்துடன் அவர்களால் இதைச் செய்வது மிகவும் எளிது. கோழைகள், நாங்கள் இதை நினைவில் வைத்திருப்போம்’ என்று டொனால்ட் டிரம்ப் தனது ட்ரூத் சோஷியலில் பதிவிட்டுள்ளார்.

ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் நீரிணை வழியாகக் கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய உதவுமாறு முக்கிய அமெரிக்க நட்பு நாடுகள் மற்றும் பிறருக்கும் ட்ரம்ப் அழைப்பு விடுத்து வருகிறார் இவர்களிடம் இந்தப் போர் குறித்து முன்னதாக எந்த ஆலோசனையும் நடத்தப்படவில்லை. நேட்டோ நாடுகள் ஈரானுக்கு எதிரான போரில் சேர விரும்பவில்லை, ஆனாலும் அதிக எண்ணெய் விலை குறித்து இன்னும் புகார் கூறுகிறார்கள் என்று அமெரிக்க அதிபர் வருத்தம் தெரிவித்தார்.

பிப்ரவரி 28-ம் தேதி ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல்களைத் தொடங்கியதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் உலகளாவிய சந்தைகள் கடும் சரிவைச் சந்தித்துள்ளன. இதற்குப் பதிலடியாகத் தெஹ்ரானும் தாக்குதல்களை நடத்தியது.

ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ஜப்பான் மற்றும் கனடா ஆகிய நாடுகள் வியாழக்கிழமை வெளியிட்ட கூட்டு அறிக்கையில், “நீரிணை வழியாகப் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்கான பொருத்தமான முயற்சிகளில்” இணைவதாக உறுதியளித்தன.

அதேநேரத்தில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடும் போக்கு நடவடிக்கை களை அவர்கள் ஏற்று கொள்ள மறுத்து விட்டதன் மூலம் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் தனித்து விடப்பட்டதாக தற்போதைய நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் யாரும் இந்த மோதலில் ஈடுபடும் விருப்பத்தை வெளிப்படுத்தியதை நான் கேட்கவில்லை – அதற்கு நேர் மாறாகவே உள்ளது” என்றும் அவர் கூறினார்.அதே சமயம் பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பிரஸ்ஸல்ஸில் நடந்த ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டிற்குப் பிறகு கூறுகையில், சர்வதேச சட்டத்தைப் பாதுகாப்பதும் பதற்றத்தைக் குறைப்பதும் “நம்மால் முடிந்த மிகச்சிறந்த காரியம்” என்று கூறினார்.

தற்போது நிலையில் சர்வதேச அளவில் நிலவும் கச்சா எண்ணெய் விநியோக தட்டுப்பாட்டை சீராக்கும் நோக்கில், ஈரான் எண்ணெய் மீதான பொருளாதார தடைகளை அமெரிக்கா சற்றே தளர்த்தியுள்ளது. இந்த சூழலில், ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை குறைப்பது குறித்து பரிசீலித்து வருவதாக அதிபர் ட்ரம்ப் பேசியுள்ளார். தங்களது எதிரிகளை தலை சுற்ற செய்யும் அளவிற்கு தக்க பதிலடி தந்துள்ளதாக ஈரான் உச்சபட்ச தலைவர் மொஜ்தாபா அறிவித்தபிறகு, ட்ரோன் மற்றும் ஏவுகணைகளை கொண்டு சவுதி அரேபியா மற்றும் இஸ்ரேல் மீது ஈரான் புதிய தாக்குதலை தொடங்கியது. இந்நிலையில் தான், மத்திய கிழக்கு போர் தொடர்பான தனது நிலைப்பாட்டை ட்ரம்ப் வெளிப்படுத்தியுள்ளார்.

ஹார்மூஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளதால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையேற்றத்துடன், விநியோகத்திலும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை சீராக்கும் நோக்கில், மார்ச் 20ம் தேதிக்கு முன்னர் கப்பல்களில் ஏற்றப்பட்ட ஈரானிய கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்துகொள்ள அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. இந்த அங்கீகாரமானது ஏப்ரல் 19ம் தேதி வரை நீடிக்கும் என தெரிவித்துள்ளது. இதன் மூலம் சுமார் 140 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் உடனடியாக உலக சந்தைக்கு கொண்டு வரப்படும் என்றும், ஈரானால் உருவான தற்காலிக அழுத்தம் குறையும் என்றும் அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த போரின் மூலம் அமெரிக்கா கடற்படை கப்பல்கள் முழுமையாக தாக்கப்பட்டது. இந்த போரின் மூலம் அமெரிக்கா வின் வலிமையான ஆயுதங்களை ஈரான் செல்லா காசாக மாற்றி விட்டது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளிடம் இருந்த வான் பாதுகாப்பு சாதனங்கள் முற்றிலும் செயல் இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த போரின் மூலம் அமெரிக்கா பெரும் பொருள் செலவைக் சந்தித்து முற்றிலுமாக வளைகுடா நாடுகளில் இருந்து வெளியேறத் தொடங்கினாலும் ஆச்சரியம் ஏதுமில்லை என்பதே யதார்த்தமான நிலையாகும்.

# மருத்துவத் துறைக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றிய

# டாக்டர் ரிஸ்வி ஷெரீப்




1948 நவம்பர் 4 ஆம் தேதி பிறந்த பிறந்த ரிஸ்வி ஷரீஃப் தனது 78 ஆம் வயதில் 30.03.2026 ஆம் திகதி வபாத்தானார். அவர் (MBBS, MD, FRCP, FRACP, FRCPE, FCCP, FNASSL, FSLCGP) ஆகிய மருத்துவத் துறையின் உயர் பட்டங்களை பெற்றவராவார்.

அவர் இலங்கையின் சிறந்த கல்வியாளர் மற்றும் மருத்துவ நிபுணர்களில் ஒருவராகப் போற்றப் பட்டவர். கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் மருத்துவப் பிந்தையக் கல்வி நிறுவனத்தின் இயக்குநராகவும், மூத்த மருத்துவப் பேராசிரியராகவும், மருத்துவத் துறைத் தலைவராகவும் அவர் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்.

அத்துடன், General Sir John Kotelawala Defence University மற்றும் இலங்கை தேசிய வைத்திய சாலையிலும் மூத்த பேராசிரியராக சேவையாற்றினார்.

அவரை இலங்கையின் மருத்துவ சமூகம் "நெஃப்ராலஜியின் தந்தை" எனக் குறிப்பிடுகிறது. நெஃப்ராலஜி என்பது சிறுநீரக நோய்களை ஆய்வு செய்து சிகிச்சையளிக்கும் மருத்துவத் துறையாகும். Western Hospital 1984 ஆம் ஆண்டு அவர்களால் நிறுவப்பட்டது. அங்கு ஆயிரக் கணக்கான சிறுநீரக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டமை அவரது சேவைகளில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

தொழில்முறை சாதனைகளைத் தாண்டி, அவர் சிறந்த மார்க்கப்பற்றுக் கொண்டவராக காணப்பட்டார்.

குறிப்பாக தப்லீக் ஜமாஅத்துடன் அவரது உறவு பலமாக காணப்பட்டதுடன் அவ்வப்போது ஜமாஅத்திலும் அவர் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். நற்குணம் கொண்ட, ஆழ்ந்த சிந்தனையுடைய, தூரநோக்குக் கொண்ட எளிமையான மனிதராக அவர் இருந்ததுடன் புகழை நாடாது, தாழ்மையுடன் சமூகத்திற்குச் சேவை செய்த அமைதியான உயர்ந்த வாழ்க்கையை வாழ்ந்தார்.

தென் மாகாணத்தின் அகுரஸ்ஸை பிரதேச போர்வை என்ற பாரம்பரிய கிராமத்தில் பிறந்த அவர் சிறுவயதில் கல்விக்காக கொழும்பு பகுதியை வந்தடைந்தாலும் தனது கிராமத்தை அவர் என்றும் மறக்கவில்லை.

அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு தொடர்ந்து உதவிகளைச் செய்து வந்தார். 2003 ஆண்டு போர்வைப் பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து பல வைத்தியர்களை அழைத்து வந்து அங்கு இலவச மருத்துவ முகாம்களையும் நடத்தி இருக்கிறார்.

அவர் தனது பிறந்த ஊரில் 2003ல் ஓர் ஹிப்ளு மதரஸாவை நிர்மாணித்து 2009 ஆம் ஆண்டு அதனை ஆரம்பித்து இன்றுவரை தனது செலவில் நடத்திக் கொண்டிருக்கிறார்.

அங்கு ஹிப்ள் மதரஸாவுடன் குர்ஆன் மதரஸா ஒன்றும் இயங்கி வருகிறது. அதன் அங்குரார்ப்பண நிகழ்வுக்காக என்னையும் அழைத்திருந்தமையை நான் நினைவு கூறுகின்றேன்.

அவரது ஊரில் கல்வித்துறையில் பின்னடைந்திருந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் அவ்வப்போது வழங்கி வந்தார். சிறுநீரக சத்திர சிகிச்சைக்காக ஊரைச் சேர்ந்தவர்கள் அவரை நாடுகின்ற சந்தர்ப்பத்தில் விசேட கழிவுகளுடன் கூடிய கட்டணங்களையே அவர் அறவிட்டதாக அறிய கிடைக்கிறது.

சமூகத்தின் மீதும் எதிர்காலத் தலைமுறைகளது உருவாக்கத்திலும் அவர் கொண்டிருந்த அக்கறை, கல்வியின் முக்கியத்துவத்தை அவர் தொடர்ந்து வலியுறுத்தியதிலேயே வெளிப்பட்டது. தனக்காக மட்டும் அல்லாமல், தனது குடும்பத்திற்கும் நன்மை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டார்.

மருத்துவத் துறைக்கான அவரது சேவை அளவிட முடியாதது.

ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு அவர் வழங்கிய வழங்கிய சிகிச்சையும், பேராசிரியராக அவர் பகிர்ந்த அறிவும், அவரது கருணையும் தாராள மனப்பான்மையும் என்றென்றும் சான்றுகளாக நிலைத்திருக்கும்.

இத்தகைய நற்செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரது நற்செயல்களின் தராசில் மிகுந்த பங்கு வகிக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

சிக்கலான காலங்களில் நீதி நிலைநாட்டத் துணிந்து குரல் கொடுத்தார். அவரது தைரியத்தையும், முஸ்லிம் சமூகத்தைப் பாதித்த விடயங்களில் அவர் வெளிப்படுத்திய அக்கறையையும் குறிப்பாக பலவந்தமாக முஸ்லிம்களது ஜனாஸாக்கள் எரியூட்டப்பட்ட பொழுது தனது கடுமையான எதிர்ப்பை ஆதாரங்களோடு அவர் முன்வைத்தத னையும் நாம் துஆக்களோடு நினைவுகூருகிறோம்.

தேசிய சூரா சபையின் பொதுச் சபை அங்கத்தவராக இருந்த அவர் அதனை வளர்ப்பதற்கு பணரீதியாக உதவி செய்தார்.முஸ்லிம் சமூகத்தில் ஒரு சாரார் தடுப்பூசி ஏற்றக்கூடாது என்ற கருத்தை முன்வைத்த பொழுது சூரா சபை கூட்டிய ஆலோசனை மன்றத்துக்கு அவர் உட்பட வைத்திய நிபுணர்களான மூத்த வைத்தியர் டாக்டர் அன்வர் ரஸீன், மகப்பேற்று மருத்துவர்களான பேராசிரியர் அக்பர், பேராசிரியர் ரிஷாட், டாக்டர் ஸை புல் இஸ்லாம் போன்றோர் சமூகம் தந்ததுடன் கலந்துரையாடலின் பின்னர் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய ஆவணத்திற்கும் அவரும் ஏனைய வைத்தியர்களும் தமது ஒப்புதலை வழங்கினார்கள்.

அல்லாஹ் அவர்களின் குறைகளை மன்னித்து, அவருக்கு பிர்தௌஸின் உயர்ந்த நிலையை அருளி, அவர் செய்த சேவைகளை நிலையான நற்செயல்களாக ஏற்றருளுவானாக.

அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், அவரை நேசித்த அனைவருக்கும் அல்லாஹ் பொறுமையையும் வலிமையையும் வழங்குவானாக.

# இராஜதந்திரம் என்பது நாகரிகமானதும், நாகரிகத்தைக் காட்டுவதுமான ஒன்றாகும்

**-அலாஸ் இராஜதந்தீரன்-**

சமீப காலமாக, ஐ.நா. பொதுச் செயலாளரின் வெளிப்படையாக சார்பானதாகத் தோன்றிய அறிக்கைக்கும், மேற்கத்திய மற்றும் வளைகுடா நாடுகளின் ஊடகங்களில் ஈரான் குறித்து வெளியான பிற விமர்சனங்களுக்கும், ஈரான் வெளிவிவகார அமைச்சின் முக்கிய பேச்சாளர் தூதர் எஸ்மாயில் பகாயி எவ்வாறு பதிலளித்துள்ளார் என்பதைப் பற்றிக் கருத்து தெரிவிக்கும் பல சமூக ஊடக பதிவுகள் வெளியாகியுள்ளன.

அந்த சமூக ஊடக பதிவுகளில் குறிப்பிடப் பட்டபடி, எஸ்மாயில் பகாயி ஒரு புத்திசாலி, செயலில் தீவிரம் கொண்ட, உறுதியுடன் செயல்படும் இராஜதந்திரி – தேவையற்ற பேச்சுகள் இல்லை, இரட்டை மொழி இல்லை, தன்னம்பிக்கை குறைவும் இல்லை.

அனுபவமிக்க இராஜதந்திரியாக இருப்பதுடன், அவர் சர்வதேச சட்டத்தில் நிபுணருமாவார். அவர் 2018 முதல் 2022 வரை ஜெனீவாவில் ஈரானின் நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றினார்.

தமது நாட்டையும் உலகெங்கும் உள்ள முஸ்லிம் சமூகங்களையும் பாதிக்கும் வகையில் பிராந்தியத்திலும் நாடுகளிலும் என்ன நடக்கிறது என்பதை தூதர் பகாயி எப்போதும் முழுமையாக அறிந்திருந்தார். அவர் நன்கு அறிந்திருந்த ஒரு விஷயம், அப்போது இலங்கையில் நடைமுறையில் இருந்த இன அடிப்படையிலான கட்டாய தகனம் கொள்கை – கோட்டாபயா காலத்தின் ஆபத்தான பாரம்பரியம்.

ரணில் விக்கிரமசிங்க இலங்கை ஜனாதிபதியாக ஆன பின்னர், 2022 செப்டம்பரில் அவரது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கையில் இன நல்லிணக்கமும் பொறுப்புக் கூறுதலும் தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு எதிராக வளர்ந்து வரும் நாடுகளையும் பிற நாடுகளையும் மனப்பூர்வமாக சம்மதிக்கச் செய்வதற்காக ஜெனீவா பயணம் மேற்கொண்டார். ஜெனீவாவில் உள்ள OIC (இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு) நிரந்தர பிரதிநிதிகளுடன் விளக்கக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு

அந்த கோரிக்கையை ஆதரித்த நாடுகளில் பாகிஸ்தானும் ஈரானும் அடங்கும். அந்தக் கூட்டத்தில் சப்ரி புதிய அரசின் திறந்த மனப்பான்மை (ரணிலின் அரசு), கடுமையான மனித உரிமை மீறல்களை உள்நாட்டு நடைமுறைகள் மூலம் கையாளும் உறுதி ஆகியவற்றைப் பற்றி பேசினார். அத்துடன் அந்த நேரத்தில் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டு வருவது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் வாதிட்டார். OIC நாடுகளின் பிரதிநிதிகள், தீர்மானத்தை இணைந்து முன்வைத்த நாடுகளை அதனை பேரவையில் முன்னெடுக்காமல் இருக்க வலியுறுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். குறிப்பாக மனித உரிமைகள் பேரவையின் உறுப்பினர்களாக இருந்த முஸ்லிம் நாடுகள், தீர்மானம் வாக்கெடுப்பிற்கு வந்தால் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

OIC விளக்கக் கூட்டத்தில் சப்ரி வழங்கிய உரைக்குப் பின்னர், இலங்கையில் முஸ்லிம்களுக்கு நடத்தப்பட்ட விதம் பற்றி சில நிரந்தர பிரதிநிதிகள் கேள்விகள் எழுப்பினர். அதன் பின்னர், OIC தூதர்களும் பிரதிநிதிகளும் அவர்களுடன் நேரடியாகவும் தனிப்பட்ட முறையிலும் பேசுவதற்கான வாய்ப்பாக ஒரு வரவேற்பு நிகழ்வை (reception) அவர் ஏற்பாடு செய்தார்.

அந்த வரவேற்பு நிகழ்விற்கு முதலில் வந்தவர்களில் ஒருவராக இருந்தவர் தூதர்

சப்ரியை வரவேற்று, அழைப்புக்கும் நன்றி தெரிவித்தார். பின்னர், இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய தகனம் கொள்கையால் ஈரான் திருப்தியடையவில்லை என்று அமைச்சரிடம் தெரிவித்தார் அந்த அரசில் சப்ரி தானும் முக்கிய அமைச்சராக இருந்தார். செய்தி தெளிவாக இருந்தது: இவ்வாறான பாகுபாடான கொள்கைகளை இலங்கை அரசு அதிகாரப்பூர்வமாக கைவிட்டதாக அறிவிக்கும்வரை, OIC அமைப்புக்குள் இலங்கை அரசுக்கு ஆதரவை ஏற்படுத்துவது ஈரானுக்கு கடினமாக இருக்கும். அதாவது, மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை ஏற்கும் போது, OIC நாடுகள் அதை ஆதரிக்கக் கூடாது என்ற புரிதலை உருவாக்குவது சிரமமாக இருக்கும். அவர் இராஜதந்திர ரீதியில், எதிர்காலத்தில் என்ன நடைபெறப் போகிறது என்பதை சப்ரிக்கு சுட்டிக்காட்டினார்.

இரண்டு நாட்கள் கழித்து, தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பிற்கு வந்தபோது, அந்தச் சுட்டிக்காட்டல் ஒரு வெளிப்படையான செய்தியாக மாறியது. பேரவையில் இருந்த பல OIC உறுப்பினர் நாடுகள் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல், வாக்கெடுப்பில் இருந்து விலகின. இலங்கை அரசு OIC நாடுகளின் ஆதரவை இழந்தது.

ஒரு வருடம் கழித்து, 2023 செப்டம்பரில், அமைச்சர் சப்ரி ஈரான் பயணம் மேற்கொண்டார் அவருக்கு அங்கு உளமார்ந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.




கொள்கை மாற்றத்தை வரவேற்று, இலங்கைக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்தனர். பல முக்கிய விஷயங்கள் அங்கு பேசப்பட்டன, மேலும் ஈரானின் ஆதரவு உறுதியளிக்கப்பட்டது. இதற்கிடையில், தூதர் இஸ்மாயில் ஜெனீவா பணியை முடித்துவிட்டு தனது தலைநகரத்திற்குத் திரும்பியிருந்தார். கொழும்பில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் கருத்தரங்கில் தனது அரசை பிரதிநிதித்துவப் படுத்த அவர் நியமிக்கப்பட்டிருந்தார் அது அவரின் இலங்கைக்கான முதலாவது வருகையாக இருக்கவிருந்தது. அமைச்சர் சப்ரியுடன் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பில், அவர் ஈரான் வெளிவிவகார அமைச்சரின் அருகில் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் சப்ரியின் உத்தியோக பூர்வ தெஹ்ரான் பயணம் மகிழ்ச்சிகரமான முறையில் முடிந்தது. அவருக்கு வரவேற்பு

தெஹ்ரானிலிருந்து துபாய் வழியாக கொழும்பு செல்லும் விமானத்தில் பயணம் செய்தார். அந்த விமானத்தில் தன்னருகில் தூதர் பகாயி அமர்ந்திருப்பார் என்று அவர் நினைத்திருக்கவில்லை. அவர்கள் நல்ல உரையாடல் ஒன்றை நடத்தினர். அப்போது பகாயி, நியூயோர்க்கிலும் ஜெனீவாவிலும் தன்னுடன் பணியாற்றிய ஒரு நல்ல நண்பர் இலங்கையில் உள்ளார் என்று சப்ரியிடம் கூறினார்.

இரண்டு நாட்கள் கழித்து, கருத்தரங்கு நடைபெற்ற கோல் பேஸ் ஹோட்டலில், தனது நல்ல நண்பரை பகாயி சந்தித்துக் கொண்டார். அந்த முன்னாள் இலங்கை தூதர் அப்போது வெளிவிவகார சேவையில் இல்லை என்றாலும், தனிப்பட்ட தொடர்புகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த வெளிவிவகார அமைச்சு, இருவரும் சந்திக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தது.


யால சரணாலயத்திலுள்ள செலினா







# காத்தான்குடியில் UNBOUND ஒளிப்படக் கண்காட்சி

ஹிமாயா ஹமீட்

இலங்கையின் மூத்த வனவிலங்குகள் ஒளிப்படக் கலைஞரான உவைஸ் முஹைதீனினால் நடாத்தப்படும் UNBOUND ஒளிப்படக் கண்காட்சி இரண்டாவது தடவையாக இம்முறை காத்தான்குடி நகரில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7 மணி வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சி தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்கு இடம்பெறவுள்ளதுடன், இக்கண்காட்சியில் ஒளிப்படக்கலை (Photography) தொடர்பிலான துறைசார் வல்லுனர்களினால் பல்வேறு கட்டங்களில் செயலமர்வுகளும் நடாத்தப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.
இக்கண்காட்சியில் இலங்கையின் தேசிய வனங்களில் எடுக்கப்பட்ட பல்வேறுபட்ட ஒளிப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. குறிப்பாக இலங்கைக்கே உரித்தான வனவிலங்குகள் மற்றும் பறவைகளின் வாழ்க்கை முறை தொடர்பிலான நேரடி ஒளிப்படங்கள் மட்டுமல்லாது, ஆபிரிக்க நாட்டின் வன விலங்குகளின் நேரடி ஒளிப்படங்களும் கண்காட்சியை அழகுபடுத்தக் காத்திருக்கின்றன.
ஏப்ரல் 02ஆம் திகதி காலை 10.30க்கு இடம்பெறவுள்ள முதல் நாள் செயலமர்வில் Camara LK நிறுவனர் அனுஷ்க குணசிங்கவினால் வனவிலங்குகளை ஒளிப்படம் எடுப்பதற்கான கருவிகள் தொடர்பில் விளக்கமளிப்படும்.
அத்தோடு பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும் செயலமர்வில் சோனி நிறுவனத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான Brand Ambassadorரும், பல்வேறு சர்வதேச ஒளிப்பட விருதுகளை வென்றவருமான லக்ஷித கருணா ரத்னவினால் வன விலங்கியல் ஒளிப்படவியலின் நவீன தந்திரோபாயங்கள் மற்றும் நடைமுறை அனுபவம் சார்ந்த விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது.
இதேவேளை பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறவுள்ள செயலமர்வில் இலங்கையின் மூத்த ஒளிப்படவியலாளர்களில் ஒருவரும், வனவாழிகள் உயிரியலாளரும், நூலாசிரியருமான விமுக்தி வீரதுங்கவினால் சிங்கராஜ வனத்தின் உயிரினப் பல்வகைமை மற்றும் ஒளிப்பட வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்கள் கலந்தாலோசிக்கப்பவுள்ளன.
3ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் கண்காட்சியில் பிற்பகல் 4 மணிக்கு இலங்கையின் முன்னணி வனவாழிகள் ஒளிப்படவியலாரும், யுனழடிந நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்றுவிப்பாளருமான றிஸ்னாட் ஹுசைனினால் ஒளிப்படங்களை பிரசுரிக்க மற்றும் அச்சிடத் தேவையான Post- Processing முறைமைகள் தொடர்பிலான செயலமர்வு இடம்பெறவுள்ளது.
மூன்றாம் நாள் கண்காட்சியில் மாலை 4 மணிக்கு இலங்கையின் மூத்த வனவிலங்குகள் ஒளிப்படக் கலைஞரான உவைஸ் முஹைதீனினால் ஒளிப்படவியலுக்கான அடிப்படைகள் தொடர்பிலான செயலமர்வு இடம்பெறவுள்ளதுடன், சுமார் 15 வருட வனவிலங்குகள் ஒளிப்படவியல் துறையில் தனது அனுபவங்கள் தொடர்பில் சுவாரஷ்யமான தகவல்களும் பரிமாறப்படவுள்ளமை குறிப்படத்தக்கது.











கண்காட்சியின் ஏற்பாட்டாளர் உவைஸ் முஹைதீனிடம் உதயம் பத்திரிகை இக்கண்காட்சி தொடர்பில் கேட்டபோது, இலங்கையின் பிரசித்தி பெற்ற வனங்கள் மற்றும் ஆபிரிக்க வனங்களில் காணப்படும் விலங்கினங்கள் தொடர்பிலான கண்காட்சியாக இக்கண்காட்சி இருக்கப் போகிறது. எதிர்காலத்தில்ீழவழபசயிால துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயனுள்ள செயலமர்வுகளும் இக்கண்காட்சியில் இடம்பெறவுள்ளது. அதேபோல் ஆபிரிக்கக் காடான மசாய் மாரா தேசிய வனவிலங்களுகள் காட்டுக்கு சபாரி சென்றபோது பிடிக்கப்பட்ட ஏராளமான ஒளிப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படுமெனத் தெரிவித்தார்.
கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கென்யா சென்று அங்கு 7 நாட்கள் தங்கியிருந்து மசாய் மாரா வனவிலங்குகள் தேசிய பூங்காவைச் சுற்றிப் பார்த்த அனுபவமானது என் வாழ்க்கையில் மறக்க முடியாத பல அனுவங்களை தந்தது. அதிலும் குறிப்பாக அகிராவை சந்திக்க போராடிய போராட்டம் இறுதியில் அகிராவை சந்தித்து எடுக்கப்பட்ட ஒளிப்படம் என்பன என் வாழ்க்கையில் மீண்டுமொருமுறை கென்யா சென்று குறைந்தது ஒன்றரை மாதங்களாவது தங்கியருந்து மசாய் மாராவை முழுவதுமாக சுற்றிப் பார்க்கவேண்டும். நிறைய ஒளிப்படங்களை எனது கெமராவில் பதிவு செய்யவேண்டுமென்ற அவாவைத் தந்தது என்று விபரித்தார்.
யாரந்த அகிரா என்று உதயம் பத்திரிகைக்கு எழுந்த சந்தேகத்திற்கு உவைஸ் முஹைதீன் இவ்வாறு பதிலளித்தார்.
அகிரா மசாய் மரா வனத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சிறுத்தை இனமாகும். பார்ப்பதற்கு மிகவும் ரம்யமான தோற்றத்தில் காணப்படும் இந்த அகிராவானது இலங்கையிலுள்ள சிறுத்தைகளைப் போன்றல்லாமல் கொஞ்சம் ஒல்லியாக இருந்தாலும் அதன் கம்பீரம் நேர்த்தியான உடல்வாகு அசையாது நிற்கும் கண்கள் என்பன இலங்கை சிறுத்தைகளை விட நான்தான் பலசாலி என்பதை உணர்த்துவதாக இருந்தது என்றார்.
அகிராவை பார்ப்பதற்காக நாங்கள் சென்றபோது எதிர்பாராத வகையில் மழை பெய்ததும் ஆற்று நீர் அதிகரித்து எம்மோடு வந்த ஜீப் வண்டி நடு ஆற்றில் மாட்டிக் கொண்டதும், கொஞ்சம் தவறியிருந்தால் நாங்கள் மசாய் மாரா முதலைகளுக்கு இரையாகியிருப்போம் எனக் கூறியவாறே அகிராவின் ஒளிப்படத்தை காண்பித்தார்.
இக்கண்காட்சியில் அகிராவின் ஒளிப்படத்துக்கு அருகில் வில்பத்து வனவிலங்குகள் சரணாலயத்திலுள்ள சிறுத்தையின் ஒளிப்படமும் காட்சிக்கு வைக்கப்படும். நேரடியாக வந்து அதன் வித்தியாசங்களை நீங்கள் பார்வையிடலாம் என்றார்.
மசாய் மாரா சிங்கக்குட்சிகள், குதிரைகள், பலமான காட்டெருமைகள், இரையை வேட்டையாடி இரத்தக் கறையோடு தன் இரையை தன் வாயால் கவ்வி வரும் பெண் சிங்கம், பெண் சிங்கத்தோடு உல்லாசமாக இருக்கும் காட்டு ராஜா, ஒற்றைக் கண்ணை இழந்த ஆண்சிங்கம் என வனங்களில் நேரடியாக காணக்கிடைக்காத அரிய பல ஒளிப்படங்கள் இக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படும்.
சுமார் 30 ஒளிப்படங்கள் இக் கண்காட்சியை அழகுபடுத்தும் அதேவேளை இலங்கையின் பழமையான வனவிலங்கு சரணாலயமான வில்பத்து, உலகப் புகழ்பெற்ற சிங்கராஜவனம், வனவிலங்குகளின் சுவர்க்கம் என அழைக்கப்படும் யால தேசிய வனம் ஆகியவற்றுக்கு நேரடியாகச் சென்று எடுக்கப்பட்ட ஒளிப்படங்களும் இக்கண்காட்சியை மேலும் அலகுபடுத்தவுள்ளன.
காணக் கிடைக்காத இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி தொடர்க்கம் 4ஆம் திகதி வரை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் நேரடியாக கலந்து கொண்டு அனைவரும் பயன்பெறுவோமாக.


















## மனநலமும் ஆலோசனையும் 95



# என் வாழ்வின் கதை

எம் வாழ்க்கை – நாம் சொல்லிக் கொள்ளும் கதைகளின் வடிவம்.
“நாம் நமது கடந்த காலம் அல்ல...
நமது கடந்த காலத்தைப் பற்றி நாம் சொல்லும் கதையே ‘நாம்’.”
இந்த வரிகள் எங்கள் உணர்வில், சிந்தனையில் மிகவும் தாக்கம் செலுத்தும் வரிகளாக அமையலாம்.
நாம் நமது வாழ்க்கையைப் பற்றி நமக்கே சொல்லிக் கொள்ளும் கதைகளால்தான் நாம் உருவாகிறோம்.
எம்மைப் பற்றிய ஒரு கதை எமக்குள் எப்போதும் உயிரோடு இருக்கிறது.
அது எம்மோடு நகர்கிறது.
வாழ்வில் நாம் சந்திக்கும் அனுபவங்களையும் நிகழ்வுகளையும் நாம் வெறும் நினைவுகளாக வைத்திருப்பதில்லை.
அவற்றை நாம் திருத்துகிறோம். பொருள் கொடுக்கிறோம். அவற்றை சூழலுடன் இணைக்கிறோம்.
அவை மெல்ல எம்முள் கதைகளாக எழுதப்படுகின்றன.
காலத்தோடு அந்தக் கதைகள் புதிய வடிவம் பெறுகின்றன.
அவை நமக்கே நம்மைப் பற்றி விளக்குகின்றன.
நாம் யாராக இருந்தோம்,
நாம் இப்போது யாராக இருக்கிறோம்,
நாம் யாராக மாறிக் கொண்டிருக்கிறோம் என்பதை எமது கதையே எமக்கு சொல்லித் தருகிறது.
இந்தக் கதை ஒரு தனிப்பட்ட “புராணம்” போல,
நம்மை நாமே புரிந்து கொள்ள உதவுகிறது.
நாம் நமது கடந்த காலம் அல்ல.
நமது கடந்த காலத்தைப் பற்றி நாம் சொல்லும் கதையே “நாம்”.
எங்கள் வாழ்க்கைக் கதை கல்லில் பொறித்தது போல நிலையானது அல்ல.
அதை நாம் மாற்றலாம்.
மீண்டும் எழுதலாம்.
புதிய அத்தியாயங்களை உருவாக்கலாம்.
புது வடிவம் கொடுக்கலாம்.
எங்கள் கதையின் ஆரம்பம் யாராவது ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம்.
ஏதாவது ஒன்றால் உருவாகி இருக்கலாம்.
ஆனால் அதன் கருவும் திசையும் எம்மால்தான் வடிவமைக்கப்பட வேண்டும்.
நாம்தான் அதற்கு அர்த்தம் கொடுக்க வேண்டும்.
எங்கள் கதையின் நாயகனாக, நாயகியாக நாம்தான் இருக்க வேண்டும். அதில் பலர் பலவற்றை செருகி இருக்கலாம். இப்படித் தான் எங்கள் கதை இருக்க வேண்டும் என்று யாரோ தீர்மானித்திருக்கலாம்.
ஆனால் எங்கள் கதை எங்களால் தான வடிவம் பெறவேண்டும் என்பதை நாம் உறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
பலரிடம் இருந்து பலவற்றை பெற்று கதையை வடிவமைக்கும் சிற்பியாக நாம் இருக்க வேண்டும்.
நாம் ஒவ்வொறுவரும் நம்மிடம் கேட்க வேண்டிய சில கேள்விகள் உள்ளன:
“நான் யார்?”
“என் கதை என்ன?”
“நான் என்ன கதையை சொல்லிக் கொண்டிருக்கிறேன்?”
என்ன கதையாக வடிவமைக்க ஆசைப்படுகிறேன்?
இந்தக் கேள்விகளே
நம்மை விழித்துக் கொள்ளச் செய்கின்றன.
நாங்கள்தான் எங்கள் கதையின் ஓட்டம்.
அந்த ஓட்டமே எங்கள் வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கிறது.
நாம் எவற்றை கவனிக்கிறோம்,
நாம் எவற்றை எதிர்பார்க்கிறோம்,
எதை சாத்தியமாக நம்புகிறோம் என்கின்ற அனைத்தும் எம் வாழ்க்கையின் தரத்தை வடிவமைக்கின்றன.
எமக்கு என்ன நடக்கிறது என்பதை நாம் எப்போதும் தேர்ந்தெடுக்க முடியாது.
ஆனால், எந்தக் கதைகள் எம் வாழ்வின் மையமாக இருக்க வேண்டும்,
எந்தக் கதைகள் மறைந்து போக வேண்டும்,
எந்த கதைகளை புதிதாக சேர்க்க வேண்டும், என்பதை
நாம் தான் தீர்மானிக்க முடியும்.
எம் கதைகள் எம் வளர்ச்சிக்கும் எழுச்சி–க்கும் சேவை செய்யவில்லை என்றால்,
அவற்றை மாற்றவும்,
திருத்தி அழகாக எழுதவும்
நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்.
ஏனெனில் – கதை எங்களுடையது.
எங்களைப் பற்றியது.
எங்களுக்காக நாமே எழுத வேண்டியது.
எங்கள் கதை அழகானதாகவும்,
ஆக்கபூர்வமானதாகவும்,
அறிவார்ந்ததாகவும் இருக்கட்டும்.
கேட்பவருக்கு சுவையாகவும் சுகமாகவும் இருக்கட்டும்.
காலம் கடந்தாலும் காவியமாக
காலத்தால் கனிந்து இனிக்கட்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

## மங்கையொளி

**பயாஸா பாஸில்**

# வெப்ப காலத்தில் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள்



வெப்ப காலம் என்பது மனித உடலுக்கு சவாலான ஒரு பருவமாகும். அதிகமான வெப்பம் உடலின் இயல்பான செயல்பாடுகளை பாதித்து, சோர்வு, தாகம், தலைச்சுற்றல் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். ஆகையால், இந்த காலத்தில் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது.

முதலில், வெப்ப காலத்தில் அதிகளவில் தண்ணீர் குடிப்பது மிக முக்கியம். உடலில் நீர்ச்சத்து குறையாமல் இருக்க தினமும் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். தாகம் இல்லாவிட்டாலும், இடையிடையே தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு கூடுதலாக, இளநீர், பழச்சாறு போன்ற இயற்கை பானங்களும் உடலை குளிர்விக்க உதவும்.

அடுத்ததாக, உணவுப் பழக்கங்களில் கவனம் செலுத்த வேண்டும். வெப்ப காலத்தில் உடலை குளிர்விக்கும் உணவுகளை அதிகமாக உட்கொள்ள வேண்டும். தர்பூசணி, வெள்ளரிக்காய் போன்ற நீர்ச்சத்து அதிகம் கொண்ட பழங்களும், தயிர் மற்றும் மோர் போன்றவை உடல் வெப்பத்தை குறைக்க உதவும். அதேசமயம், காரம் மற்றும் எண்ணெய் அதிகம் உள்ள உணவு களை தவிர்ப்பது நல்லது.

மேலும், வெளியில் செல்லும் போது கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக மதியம் 11 மணி முதல் 3 மணி வரை வெயில் மிகவும் கடுமையாக இருக்கும். இந்த நேரங்களில் வெளியே செல்லாமல் இருக்க முயற்சிக்க வேண்டும். வெளியே செல்ல வேண்டிய அவசியம் இருந்தால், குடை, தொப்பி போன்றவற்றை பயன்படுத்தி உடலை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பருத்தி ஆடைகள் அணிவது உடலுக்கு குளிர்ச்சியை வழங்கும்.

தோல் பாதுகாப்பும் வெப்ப காலத்தில் முக்கியமானதாகும். வெயிலில் செல்லும் முன் சன்ஸ்கிரீன் பயன்படுத்துவது தோலை பாதுகாக்க உதவும். மேலும், அடிக்கடி முகம் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம்.

இதற்கு இணையாக, வீட்டினுள் குளிர்ச்சியான சூழலை பராமரிக்க வேண்டும். காற்றோட்டம் நன்றாக இருக்கும்படி ஜன்னல்கள் திறந்து வைத்தல், குளிர்ந்த நீரில் குளித்தல் போன்றவை உடல் வெப்பத்தை குறைக்க உதவும்.

இறுதியாக, வெப்பத்தால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளை கவனமாக அணுக வேண்டும். தலைச்சுற்றல், அதிக சோர்வு, தாகம் போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனே ஓய்வு எடுத்து, தேவையானால் மருத்துவரை அணுக வேண்டும்.

முடிவாக, வெப்ப காலத்தில் சரியான பழக்கவழக்கங்களை பின்பற்றுவதன் மூலம் நமது உடல்நலத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும். “தடுப்பதே சிறந்த சிகிச்சை” என்பதுபோல், முன்கூட்டியே கவனமாக இருந்தால் வெப்பத்தின் பாதிப்புகளை எளிதாக தவிர்க்கலாம்.

# மருத்துவ மேதை டொக்டர் ரிஷ்வி ஷெரீபின் மறைவு, வைத்திய துறைக்கு பேரிழப்பு!

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாட் பதியுதீன் அனுதாபம்

மருத்துவ பேராசிரியர் டொக்டர் ரிஷ்வி ஷெரீபின் மறைவு, வைத்திய உலகில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதுடன், அன்னாரின் சிகிச்சையால் தேகாரோக்கியமடைந்த சகலரையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து றிஷாட் பதியுதீனின் அனுதாபச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது.
சிறுநீரக நோயியல் நிபுணர் டொக்டர் ரிஷ்வி ஷெரீப், தமது அளப்பரிய சேவைகளால் உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பிரபல்யம் பெற்றவர். உயிருக்காக போராடிய பல சிறுநீரக நோயாளர்களுக்கு, இறைவனின் நம்பிக்கையோடும் மருத்துவ திறைமையாலும் ஆரோக்கிய வாழ்வளித்த மருத்துவ மேதை இவர். இவரது இனிய சுபாவங்கள், நோயாளிக்கு தைரியத்தை வரவழைக்கும். இறை தியானத்தில் ஆழ்ந்த பற்றுள்ள டொக்டர் ரிஷ்வி ஷெரீப், உலகாயத சுகபோகங்களை ஒதுக்கியே வாழ்ந்திருந்தார். செல்வத்தின் உச்சத்திலும், புகழின் எல்லையிலும் வாழக் கிடைத்த போதும், இறைவனுக்கு பயந்து வாழும் மிகப்பெரிய பக்குவமே, இவரைப் புடம்போட்டது.
நேர்மையான உழைப்பு மற்றும் நீதியான நடத்தைகளால் தமது சமூகத்துக்கு நற்கீர்த்தியை ஏற்படுத்திய பெருந்தகையும் இவரே. உலக வாழ்வை எளிய முறையில் வாழ்வதற்கான பல படிப்பினைகள் இவரிடம் இழையோடியிருந்தன. இளைய மருத்துவ துறையினருக்கு மட்டுமல்ல, சகலரின் முன்னேற்றத்துக்கும் டொக்டரின் வாழ்வில் பல முன்மாதிரிகள் உள்ளன.





எல்லாம் வல்ல இறைவன் அன்னாரை பொருந்திக் கொண்டு மறுமையில், ஈடேற்றம் வழங்குவானாக. அன்னாரது பிரிவால், துயருறும் சகலரையும் இறைவன் அருள்பாலிப்பானாக.

# நான் நேசிக்காத ஜே. ஆர் நூல் வெளியீட்டு விழா



முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆற்றிய ஜே.ஆர். ஜயவர்தன நினைவுப் பேருரையிலிருந்து தொகுக்கப்பட்ட "நான் நேசிக்காத ஜே. ஆர்" என்ற நூலும் அதன் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளிலான பதிப்பு நூல்களும் நேற்றுமுன்தினம் (30) மாலை கொழும்பு ஜே.ஆர். ஜயவர்தன கேந்திர நிலையத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர்களான கரு ஜயசூரிய, மஹிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பல பிரமுகர்களும் பிரசன்னமாகி இருந்தனர்.
வெளியீட்டு வைபவத்தில், சிங்கள மொழியிலான நூல் தொடர்பான விமர்சனத்தை சர்வதேச ஊடக ஒத்துழைப்புக்கான ஆசிய பிராந்திய ஆலோசகரும், அரசாங்க தகவல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி ரங்க கலன்சூரியவும், தமிழ் நூல் தொடர்பான விமர்சனத்தை ஐக்கிய இராச்சிய இஸ்லாமிய அறக்கட்டளையின் தலைவரும், குழந்தைகள் நல விசேட வைத்திய நிபுணருமான டாக்டர் முஸ்தபா ரயீஸூம், ஆங்கில நூல் குறித்தான விமர்சனத்தை வெலிகம மாநகர சபையின் முன்னாள் தவிசாளரும், அரசியல் செயற்பாட்டாளருமான ரெஹான் ஜயவிக்ரமவும் நிகழ்த்தினர்.



# 'உயிர்த்த ஞாயிறு மறைகரம் வெளிப்பட்ட போது" மொழிபெயர்ப்பு நூலுக்கு துரைவி விருது



பேராசிரியர் ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய, சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன் தமிழில் மொழிபெயர்ப்பு செய்த 'உயிர்த்த ஞாயிறு மறைகரம் வெளிப்பட்ட போது' என்ற நூலுக்கு 2025-ஆம் ஆண்டிற்கான 'துரைவி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.
முன்னாள் அமைச்சரும் சிரேஷ்ட அரசியல்வாதியுமான பி.பி. தேவராஜிடமிருந்து நூலின் மொழிபெயர்ப்பாளர் விருதினைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வு ஓய்வுபெற்ற, அமைச்சின் செயலாளர் எம்.வாமதேவன் தலைமையில் கொழும்பு தமிழ் சங்கத்தில் அண்மையில் நடைபெற்றது.
பேராசிரியர் ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய இந்த ஆய்வு நூலானது, இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியிலுள்ள மர்மங்கள் மற்றும் உண்மைகளைத் தர்க்கரீதியாக விவரிக்கிறமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு ஸ்மார்ட்கிரோ கற்றல் மையத்தின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் விழா

(எம்.எச்.எம். சியாஜ்)

கொழும்பு ஸ்மார்ட்கிரோ கற்றல் மையத்தின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (28) கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு ஸ்மார்ட் கிரோ கல்வி நிலைய பணிப்பாளர் திருமதி மேனன் தேவராஜ் பிள்ளை தலைமை யேற்றார்.
இவ்விழாவின் பிரதம அதிதிகளாக ஹாஷிம் உமர் பௌண்டேஷன் நிறுவனரான தொழிலதிபர் ஹாஷிம் உமர் மற்றும் மர்யம் ஹாஷிம் உமர் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர். ஆபாகாஸ் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
இவ்விழாவில் கல்வி நிலைய ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.





# தினகரனுக்குப் பணியாற்றிய இருவருக்கு கௌரவம்





(அஷ்ரப் ஏ சமத்)

தினகரன் பத்திரிகையின் 94 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு லேக் ஹவுஸ் தினகரன் ஆசிரிய பீடத்தில் தினகரன் நாளாந்த பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தொ.செந்தில் வேலவர் தலைமையில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
இந்நிகழ்வில் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் காமினி வர்சுன்ன, பத்திரிகை ஆசிரியர் பணிப்பாளர் சிசிர யாப்பா, பணிப்பாளர் சன்ன கெவட்டிகல, மற்றும் பணிப்பாளர் சமர நாணயக்கார பொதுமுகாமையாளர் சுமித் கொத்தலாவல மற்றும் தினமின, டெய்லி நியூஸ், சிலுமின, சண்டே ஒப்சேவர் ஆகிய பத்திரிகைகள் ஆசிரியர்கள் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் தினகரன் ஆசிரிய பீட ஊடகவியலாளர்கள் விளம்பர முகாமையாளர் கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
அத்துடன் 40 வருடங்களுக்கு மேல் இங்கு சேவையாற்றிய முன்னாள் பிரதி ஆசிரியர் ஆனந்தி பாலசிங்கம் 43 வருடங்கள் பேருவளை பிரதேச பிராந்திய ஊடகவியலாளர் கடமையாற்றிய பி.எம். முக்தார் ஆகியோர்களின் நீண்ட கால சேவையைப் பாராட்டி கௌரவிக்கப் பட்டதுடன் 94 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கேக் வெட்டி ஊழியர் களுக்கு டி.சேர்ட் மற்றும் நினைவு கப் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

# புதன்கிழமை அரச விடுமுறை தூரப் பிரதேச உத்தியோகத்தர்களுக்கு மனக் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது

## இம்ரான் எம்.பி

(எம்.ஏ.முகமட்)

எரிபொருள் சிக்கனத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் அறிவித்துள்ள ஒவ்வொரு புதன் கிழமையும் அரசவிடுமுறையானது தூரப் பிரதேசங்களிலிருந்து அலுவலகங்களுக்குச் செல்வோருக்கு மனக் கஸ்டத்தை ஏற்படுத்தியுள்ளது எனவே, இது குறித்து அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அதிகமான அரச உத்தியோகத்தர்கள் தூரப் பிரதேசங்களில் இருந்து பணிக்குச் செல்கின்றனர். இவர்கள் தமது அலுவலகப் பகுதியில் தங்கி இருக்கின்றனர். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதன் கிழமை விடுமுறை சொந்த பிரதேசங்களில் பணிபுரிவோருக்கு நன்மையளிப்பது போல இவர்களுக்கு எந்த வகையிலும் பயனளிக்காது. இந்த ஒரு நாள் விடுமுறையைப் பயன்படுத்தி இவர்களால் தமது வீடுகளுக்கு வந்து செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. நாட்டின் நெருக்கடி நிலை குறித்து கவனத்தில் கொண்ட அரசாங்கம் இவ்வாறான உத்தியோகத்தர்களின் நலன் குறித்து கவனத்தில் கொள்ளாது அவர்களைக் கைவிட்டுள்ளது கவலையை ஏற்படுத்துகின்றது.

எனவே, அரசாங்கம் இந்த விடுமுறை தினத்தை திங்கட்கிழமை அல்லது வெள்ளிக்கிழமையாக மாற்ற வேண்டும். அல்லது தூரப் பிரதேசத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் நன்மை பெறும் வகையில் ஏதாவது திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். சகல அரச உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தினால் சமமாகப் பார்க்கப்பட வேண்டும். சிலர் நன்மையடையும் அதேவேளை இன்னும் சிலர் கஸ்டப்படும் நிலை குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றேல் இவ்வாறான அரச உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப் பட்டுள்ளதாகவே கருத



வேண்டிய சூழ்நிலை உருவாகும் என தெரிவித்தார்.

# சீனன் கோட்டை வரலாற்றில் முதல் தடவையாக பள்ளிவாசலில் கடமையாற்றிய முஅத்தீன் ஒருவர் கௌரவிப்பு



( பீ. எம் முக்தார்)

பேருவளை சீனன் கோட்டை நவ்பர் ஜாபிர் மாவத்தை இப்ராஹிமிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக முஅத்தீனாக கடமையாற்றும் முகத்தமுஷ் ஷாதுலி அபுல் ஹஸன் ஹாஜியாரின் சேவைகளை கௌரவித்து பாராட்டும் நிகழ்வும் புனித ரமலான் மாதம் இரவு நேரத்தில் 30 நாட்கள் நடைபெற்ற ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பங்கு பற்றிய சிறார்களுக்கு பணப் பரிசில் வழங்கும் வைபவமும் மேற்படி ஸாவியாவில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி ஸாவியா பரிபாலன கமிட்டியுடன் பிரதேச வாழ் மக்கள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்ததோடு அபுல் ஹஸன் ஹாஜியாருக்கு நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் சீனன் கோட்டைப் பள்ளிச்சங்க இணைச் செயலாளருமான கலீபதுஷ் ஷாதுலி அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சீனன் கோட்டைப் பள்ளிச்சங்க இணைப் பொருளாளர்களான அல்ஹாஜ் ஸபுவான் நயீம், ஏ.இஸட்.எம் ஸவாஹிர் ஹாஜியார், பள்ளிச் சங்க உறுப்பினர் இஸ்ஸத் ஸவாஹிர், சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஸஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் ரபீக் (பஹ்ஜி) உட்பட பெருமளவிலான இஹ்வான்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# கிண்ணியா அல்-அக்ஸா மற்றும் அல் ஹிரா பழைய மாணவர் ஒன்றுகூடல்



(எம்.ஏ. முகமட்)

கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி மற்றும் அல்ஹிரா மகளிர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் (1995 சாதாரண தரம்) ஒன்றுகூடல் நிகழ்வு (28) சனிக்கிழமை சீனக்குடா மாபிள் பீச் கடற்கரைப் பகுதியில் நடைபெற்றது.

கட்டார் நாட்டில் வைத்தியசாலையில் எச்.ஆர்.முகாமையாளராக கடமையாற்றும் ஏ.அமீருல்லா மற்றும் புரவலர் எம்.ஏ.எம்.நாஜிர் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலந்து கொண்ட சிறுவர், சிறுமிகளுக்கான போட்டி நிகழ்ச்சிகளும் இடம் பெற்றதுடன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் அங்குநொச்சிய அல்மாஸ் மாணவன் உமைர் முதலிடம்



(எம்.ரீ.ஆரிப்)

கெப்பித்திகொல்லாவ கல்வி வலய அங்குநொச்சிய அல்மாஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 06ல் கல்வி பயிலும் மாணவன் ஆர்.உமைர் மாகாண மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். இந்த பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்திற்கு முதன் முதலில் இவர் தெரிவு செய்யப்பட்டமை பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளது.

இவரின் தொடர் வெற்றிக்கு அயராது பாடுபட்ட கணிதப் பாட ஆசிரியை கே.முபாசா பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் பாடசாலை நலன் விரும்பிகள் என சகலருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக அதிபர் ஏ.பீ. அமான் தெரிவித்தார்.

# ஜாஹீர் ஜே.பி வெற்றிக்கிண்ண இறுதியாட்டம்: மாளிகா பிங்க் அணி சம்பியன்

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், தற்போதைய உறுப்பினரும், பிரதேச சமூக சேவகருமான ஏ.எம். ஜாஹீரின் பெயரில் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்ற ஜாஹீர் ஜே.பி வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடர் இறுதியாட்டத்தில் மாளிகா பிங்க் அணி வெற்றி பெற்று சம்பியனாக திகழ்ந்தது.

மாளிகா விளையாட்டுக்கழகத்தின் நான்காவது ஆண்டை முன்னிட்டு கழகத் தலைவர் எஸ். பஸ்லூன் தலைமையில் சாய்ந்தமருது அஸ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் மிகவும் பரபரப்பாக ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இந்த இறுதி போட்டியில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆரம்பம் முதலே கட்டுப்பாடான பந்துவீச்சும், துல்லியமான துடுப்பாட்டமும் மூலம் மாளிகா பிங்க் அணி சகல ஓவர்களையும் எதிர்கொண்டு ஐந்து விக்கெட்டுகளை இழந்து 95 ஓட்டங்களை பெற்று போட்டியில் ஆதிக்கம் செலுத்தியது. மாளிகா பிங்க் அணியும் கடைசி வரை போராடிய போதிலும், மாளிகா பிங்க் அணியின் ஒருங்கிணைந்த ஆட்டத்தை சமாளிக்க முடியாமல் சகல ஓவர்களையும் எதிர்கொண்டு ஆறு விக்கெட்டுகளை இழந்து 77 ஓட்டங்களை மட்டுமே பெற்று 17 ஓட்டங்களினால் மாளிகா ப்ளூ அணி தோல்வியடைந்தது.



போட்டியின் சிறந்த வீரராக மாளிகா பிங்க் அணியின் வீரர் என்.எம்.சபீர் தேர்வு செய்யப்பட்டார். போட்டி முடிவில் சம்பியன் அணிக்கும் மற்றும் போட்டியில் பிரகாசித்தவர்களுக்குமான வெற்றிக்கிண்ணங்களை பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்த காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், தற்போதைய உறுப்பினருமான ஏ.எம். ஜாஹீர், கௌரவ அதிதியாக கலந்து கொண்டிருந்த அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளர் யூ.எல்.நூருல் ஹுதா, ஜாஹீர் பௌண்டஷன் சிரேஷ்ட ஆலோசகர் பி சம்சுதீன், ஜாஹீர் பௌண்டஷன் நிர்வாகிகள் உட்பட கழக முக்கியஸ்தர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.



# அதிகாரத்திலிருந்த ஹக்கீம் அலிசப்ரியால் முடியாததை குரல்கள் சட்டத்தரணிகள் செய்து காட்டியுள்ளனர்

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு



கடந்த 4 தசாப்தங்களாக பல்வேறு அரசாங்கங்களில் பல்வேறு அமைச்சுக்களின் அமைச்சரவை அமைச்சராக முஸ்லிங்கள் இருந்தும் கடந்த காலங்களில்நீதி அமைச்சராக ரவூப் ஹக்கீம், அலி சப்ரி போன்ற மூத்த சட்டத்தரணிகள் இருந்தும் சமூகம் அடையாத நன்மையை குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகள் சாதித்து முஸ்லிம் சமூகத்தின் குரலாக எழுந்து நீதியின் கதவை தட்டியுள்ளமை பாராட்டப்பட வேண்டியது என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடக அறிக்கை யொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும், 1990 காலப்பகுதியில் கிழக்கில் குருக்கள்மடம் பகுதிகளில் விடுதலை புலிகள் அமைப்பினால் ஹாஜிகள் கொல்லப்பட்டதாக கூறப்படும் படுகொலை சம்பவங்கள் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு தாமெதித்தேனும் நீதி கிடைக்குமா என்ற கேள்வி சமூகத்தில் இப்போது எழுந்துள்ளது.

அந்த காலகட்டத்தில் பொதுமக்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக தற்போது நீதிமன்றத்தின் விசாரணை இடம்பெற்று அந்த விசாரணையின் ஒரு பகுதியாக, சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் புதைகுழிகள் தோண்டி எடுக்கப்படும் பணிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இச்சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுமா என்பது தொடர்பில் இன்னும் தெளிவில்லை.

இந்நிலையில், கடந்த காலத்தில் விடுதலை புலிகள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்த முக்கிய நபர்களான கருணா அம்மான், பிள்ளையான் போன்றோர்கள் தற்போதைய அரசியலில் ஈடுபாட்டுடன் உள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதேவேளை, ஊழுஏஐனு-19 காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய தகனம் தொடர்பாகவும் முஸ்லிம் சமூகத்தில் நீதி கோரும் குரல்கள் தொடர்ந்து எழுந்து வருகின்றன. அந்த காலகட்டத்தில் கட்டாயமாக தகனம் செய்யப்பட்ட ஜனாஸாக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் தீர்வு காணப்படாத நிலையில் உள்ளது.

முன்னாள் அரசாங்க காலத்தில், இந்த விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில்விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எங்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் இதுகுறித்து யோசனை முன்வைத்திருந்தாலும், அதன் பின்னர் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

தற்போதைய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில், கடந்த கால படுகொலை சம்பவங்களுக்கும், கட்டாய தகன விவகாரத்திற்கும் நீதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக செயற்பாட்டாளர்கள் வலியுறுத்துகின்றனர். "சந்தேக நபர்கள் உயிருடன் இருக்கும் நிலையில், அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது அரசாங்கத்தின் கடமை. கட்டாய தகனம் என்பது ஒரு கடுமையான மனித உரிமை மீறல் அதற்கும் நீதி கிடைக்க வேண்டும்," என சமூகத்தின் பல்வேறு தரப்பினர் வலியுறுத்துகின்றனர்.

முஸ்லிம் சமூகத்திற்கு அமைச்சரவை பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறதா இல்லையா என்பது விட, இவ்வாறான நீதி கேள்விகளுக்கு தீர்வு காணப்படுவது அவசியம். இந்நிலையில், நடந்து வரும் விசாரணைகள் எவ்வாறு முன்னேறுகின்றன, மற்றும் அரசாங்கம் தனது வாக்குறுதிகளை எப்போது நிறைவேற்றுகிறது என்பது குறித்து நாடு முழுவதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகளின் அரபு எழுத்தணிக் கண்காட்சி



**(அஷ்ரப் ஏ சமத்)**

பம்பலப்பிட்டிய முஸ்லிம் மகளிர் கல்லூரி, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவியர் அரபு எழுத்துக்கலை என்பது வெறும் எழுதுவது மட்டுமல்ல அது தெய்வீக வார்த்தையின் காட்சி வடிவமாகும். இதயம் கரத்துடன் இணக்கமாக இயங்கும் ஒரு ஆன்மீகப் பயணம். சில மாதங்களுக்கு முன்பு, மாணவிகள் 'அரபு எழுத்துக்கலை" என்ற ஒரு புதிய விஷயத்தைத் தொடங்கினார்கள்.

முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 2024/25 ஆம் ஆண்டுக்கான முஸ்லிம் மஜ்லிஸின் ஒரு முன்னெடுப்பின் பயணமாக இது கடந்த ஆண்டில், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு (2025) மாணவர்கள் தொடங்கினார்கள். அரபு எழுத்து முறையின் வளைவுகளையும் கோடுகளையும் மட்டுமல்லாமல் அதனுடன் வரும் ஒழுக்கத்தையும் அமைதியையும் இம் மாணவிகள் கற்றுக்கொண்டனர்.

கடந்த ஆண்டு முழுவதும் நடைபெற்ற அரபு எழுத்துக்கலை வகுப்புகள் வெற்றிகரமாக நிறைவடைந்ததையடுத்து, கடந்த மார்ச் மாதம் 27ம் திகதி அரபு எழுத்துக்கலைக் கண்காட்சியை மாணவிகள் ஏற்பாடு செய்தது ஒரு மகத்தான தருணமாகும்.

இக்கண்காட்சியில் சிறப்பு விருந்தினராக வித்யா சமுக்க ஜோதி அல்-ஹஜ் எம்.சி.பஹர்தீன் கலந்து கொண்டு, கலை வெளிப்பாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள எங்களது மாணவர்களின் வாரக்கணக்கான அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் மனவுறுதிக்கு ஒரு சாட்சியாகும். நாங்கள் அவர்களின் தலைசிறந்த படைப்புகளைப் போற்றி மதிக்கிறோம், மேலும் அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

# மலையக மக்களின் டித்வா பாதிப்பு தொடர்பான ஆவணம் கையளிப்பு



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மலையக மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பாக "மலையக மீள்கட்டமைப்பிற்கான சிவில் அமைப்புகளின் கூட்டிணைவு" தயாரித்து வெளியிட்ட ஆவணம், வியாழக்கிழமை (26) ஜனாதிபதி செயலாளர் அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், மலையக மறுசீரமைப்பிற்கான சிவில் அமைப்புகளின் கூட்டிணைவின் பிரதிநிதிகளுடன், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அத்தோடு பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட பிரதி செயலாளரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததாகவும் அவருடன், நீண்ட நேரம் மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியதாகவும் பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் என்டன் ஜேசுதாஸன் தெரிவித்தார்.

# ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பங்குபற்றியோருக்கு பணப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு



**(பீ.எம். முக்தார்)**

பேருவளை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் ஆத்மீக ஞானி அஷ் ஷெய்க் உஸ்மான் லெப்பை ஆலிம் (ரஹ்) அவர்களின் ஞாபகர்த்த மஜ்லிஸும் புனித ரமழான் மாதம் இரவு நேரத்தில் 30 நாட்கள் நடைபெற்ற ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பங்கு பற்றிய சிறார்களுக்கு பணப் பரிசில் வழங்கும் வைபவம் மேற்படி பள்ளிவாசலில் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல் ஹாஜ் எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சீனன் கோட்டைப் பள்ளிச்சங்கத் தலைவரும் ஜாமியா நளீமியா கலாபீட உப தலைவருமான ஏ.எச். எம். முக்தார் ஹாஜியார், மேற்படி பள்ளிவாசலின் உபகுழுவின் வழிகாட்டலின் கீழ் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேசத்தைச் சேர்ந்த அதிகளவிலான மாணவர்கள் இம் மஜ்லிஸில் பங்கு பற்றினர். பள்ளிவாசலில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் சீனன் கோட்டைப் பள்ளிச்சங்க இணைச் செயலாளர்களான அல் ஹாஜ் எம்.எம்.எம் ஷிஹாப், கலீபதுச் சாதுலி அஸ்செய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி), அல்ஹாஜ் ரம்லான் அரூஸ், உப தலைவர் அல்ஹாஜ் எம். ஸப்வான் நயீம், உறுப்பினர்களான அல் ஹாஜ் முஸ்னி உவைஸ் தஹ்லான் மன்ஸூர், உட்பட உலமாக்கள் பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பால் நிலை சமத்துவ கற்கை நெறி



**(மாவனல்லை நிருபர்)**

கனடா அரசாங்கம் கனடிய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக, ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் மற்றும் நவ்யோத்பார சமூக அபிவிருத்தி நிறுவனம ஆகியவற்றின் ஒத்துழைப்போடு, சம உரிமை கற்கை நெறியொன்றை நடத்தியது.

பால் நிலை அடிப்படையிலான வன்முறை, தீங்கு விளைவிக்கும் பால் நிலை, சமூக நெறிமுறைகளை எதிர் கொள்ளுதல், அதனை நிவர்த்தி செய்தல் மற்றும் நடத்தையில் மாற்றத்தை கொண்டு வருதல் தொடர்பான நான்கு நாட்கள் கொண்ட இக் கற்கை நெறி கொழும்பு ரேணுகா சிடி ஹோட்டலில் அண்மையில் பெற்றது.



நாடு பூராகவும் உள்ள சிவில் சமூக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள், மகளிர் மற்றும் சிறுவர் அலுவலக அமைச்சு, பால் நிலை நீதிசார் நிபுணர்கள் 46 பேர் அளவில் இதில் கலந்து சிறப்பித்தனர்.

நவ்யோத்பாத சமூக அபிவிருத்தி நிறுவன பணிப்பாளர் சமிதா சுகதமாளா, ஆர். எம். சதுரிகா மதுமாலிஜயலத், கயான் ராஜபக்க்ஷ, குமாரி இடமெகசே மற்றும் ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை உறுப்பினர்களான ஹிரோஷனி குணதிலக, பிமாலி அமரசேகர ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். அத்துடன் சமூகம் சார்ந்த இக் கற்கை நெறியை பூர்த்தி செய்த அனைவரும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.


அரபாத் பஹர்தீன்

# இலங்கை - இந்திய கிரிக்கெட் தொடர் இவ்வருட இறுதியில்

இலங்கை ஆடவர் கிரிக்கெட் அணி இந்த வருட இறுதியில் இந்தியாவுக்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

குறித்த தொடருக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப்பயணத்தில் 3 ஒருநாள் சர்வதேச மற்றும் 3 இருபதுக்கு 20 போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்தப் போட்டித் தொடரில் முதலாவதாக ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, டிசம்பர் 13,16 மற்றும் 19 ஆம் திகதிகளில் மூன்று ஒருநாள் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

அதேநேரம், டிசம்பர் 22,24, மற்றும் 27 ஆம் திகதிகளில் மூன்று இருபதுக்கு 20 போட்டிகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யுனைடெட் புட்சல் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிய யுனைடெட் விளையாட்டு கழகம்



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

சூப்பா சூப்ஸ் சுற்றுலா தகவல் மையத்தின் பணிப்பாளரும் கற்பிட்டி பிரதேச சபையின் மண்டலக்குடா வட்டார உறுப்பினருமான சுவிஸ் பைசல் ஏற்பாட்டில் கற்பிட்டி மண்டலக்குடா அல்மனார் விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் அணிக்கு ஐந்து பேர் கொண்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் யுனைடெட் விளையாட்டு கழக அணியும் (UNITED SPORTS CLUB) பர்ஷிலோனா அணியும் (BARCELONA) மோதிக் கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் யுனைடெட் விளையாட்டு கழக அணி 04:01 என்ற கோல் கணக்கில் பர்ஷிலோனா அணியை வெற்றி கொண்டு 2026 ஆம் ஆண்டிற்கான யுனைடெட் புட்சல் வெற்றிக் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது.

இறுதிப் போட்டியின் பரிளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கற்பிட்டி பிரதேச சபையின் மண்டலக்குடா வட்டார உறுப்பினர் சுவிஸ் பைசல் கருத்து தெரிவிக்கையில் இளைஞர்களை விளையாட்டில் ஆர்வமூட்டும் வகையிலேயே இவ்வாறான சுற்றுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுவதாகவும் தொடராக இவ்வாறான சுற்றுப் போட்டிகள் நடாத்துவதற்கு தாம் முயற்சி செய்வதாகவும் கற்பிட்டியில் உள்ள அனைத்து விளையாட்டு மைதானங்களையும் பிரதேச சபை ஊடாக அபிவிருத்தி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.



# DPL-2026 Season 5 சாம்பியனாக தெல்தோட்டை டிராகன்ஸ் அணி தெரிவு

ஈதுல் பித்ர் நோன்பு பெருநாளை முன்னிட்டு தெல்தோட்டை, வாலிபர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட தெல்தோட்டை பிரிமியர் லீக் ளுநயளழ5 5 மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் சாம்பியனாக முர்ஷிட் தலைமையிலான தெல்தோட்டை டிராகன்ஸ் அணி இரண்டாவது முறையாக முடி சூடிக் கொண்டது.


கடந்த மார்ச் மாதம் 22ம் மற்றும் 23ம் திகதிகளில் தெல்தோட்டை கரகஸ்கட விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பயாஸ் தலைமையிலான தெல்தோட்டை ரோயல்ஸ் அணியை 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தெல்தோட்டை டிராகன்ஸ் அணி வெற்றிக் கொண்டது.



போட்டித் தொடரின் நாயகனாக தெல்தோட்டை டிராகன்ஸ் அணியின் தலைவர் முர்ஷிட் தெரிவாக இறுதிப் போட்டியின் நாயகனாக தெல்தோட்டை டிராகன்ஸ் அஷான் தெரிவானார்.

தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக தெல்தோட்டை டிராகன்ஸ் அணியின் அஷான் மற்றும் சிறந்த டுநபயனெ பந்து வீச்சாளாராக தெல்தோட்டை டிராகன்ஸ் ஹலீம் தெரிவாக, சிறந்த துடுப்பாட்ட வீரராக தெல்தோட்டை டிராகன்ஸ் அணியின் தலைவர் முர்ஷிட் தெரிவானார்.

# நசீம் ஷாவுக்கு 20 மில்லியன் அபராதம்



பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் நசீம் ஷாவுக்கு 20 மில்லியன் பாகிஸ்தான் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநில முதலமைச்சர் மரியம் நவாஸை விமர்சிக்கும் வகையில் நசீம் ஷாவின் உத்தியோகபூர்வ சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிடப்பட்ட கருத்தே இந்த அதிரடி நடவடிக்கைக்குக் காரணமாகும்.

மத்திய கிழக்கு ஆசியாவில் நிலவும் போர் பதற்றம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, நடப்பு பி.எஸ்.எல் தொடர் ரசிகர்கள் இன்றி மூடிய மைதானத்தில் நடைபெறும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

இருப்பினும், தொடரின் ஆரம்பப் போட்டியில் முதலமைச்சர் மரியம் நவாஸ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மைதானத்திற்கு வருகை தந்து வீரர்களைச் சந்தித்தனர்.

இதனை விமர்சிக்கும் வகையில், லோர்ட்ஸ் மைதானத்தில் மகாராணிக்கு அளிக்கப்படும் மரியாதையைப் போல இவருக்கு ஏன் அளிக்கப்படுகிறது? என நசீம் ஷாவின் கணக்கிலிருந்து ஒரு பதிவு இடப்பட்டது.

சற்று நேரத்திலேயே அந்தப் பதிவு நீக்கப்பட்டதுடன், தனது கணக்கு முடக்கப்பட்டதாக நசீம் ஷா விளக்கமளித்திருந்தார்.

இது தொடர்பாக நடைபெற்ற விசாரணையில் நசீம் ஷா நிபந்தனையற்ற மன்னிப்பு கோரினார்.

இந்தநிலையில் சினேகபூர்வ ஒப்பந்தத்தின் சரத்துக்களை மீறியதாக நசீம் ஷாவுக்கு 2 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் வீரர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட மிகப்பெரிய அபராதமாக இது கருதப்படுகிறது.

# தேசிய சுப்பர் லீக் போட்டிகள் இம்மாதம் ஆரம்பம்




இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய சுப்பர் லீக் (NSL) நான்கு நாள் கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டது. இத்தொடர் இம் மாதம் (ஏப்ரல்) 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கடந்த ஆண்டு வரை 5 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், இம்முறை யாழ்ப்பாணம் அணி நீக்கப்பட்டு, அணிகளின் எண்ணிக்கை 4 ஆகக் குறைக்கப்பட்டிருப்பது ஒரு விசேட அம்சமாகும்.

கொழும்பு, கண்டி, காலி மற்றும் தம்புள்ளை ஆகிய நான்கு அணிகள் பங்குபற்றும் இத்தொடரின் ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் மூன்று வாரங்களுக்கு நடைபெறவுள்ளதுடன், ஏப்ரல் 28ஆம் திகதியுடன் இச்சுற்று நிறைவடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து, புள்ளிப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மே மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். இறுதிப் போட்டியானது கொழும்பு ஆர். பிரேமதாச சரவதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும்